ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

11.08.2010 - மலர் 07, இதழ் 23



## கண்ணியம் மிக்க 'ரமழான்' மாதம்

## உலகை ஆளுகின்ற facebook

## அதிசயப் பறவை பென்குயின்

## குருதிச்சோகையை தவிர்க்கும் வழிமுறைகள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழுநோய் வைத்தியசாலை

எல்லைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த கடுமையான காவல் கடமைகள் அனைத்தும் மீண்டும் நீக்கப்பட்டன. அதனால், கொழும்பில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடும் நீங்கியது. கொரமண்டல், மலபார் ஆகிய இடங்களில் உள்ளோர் ஒல்லாந்த அதிகாரிகளுக்கு கொழும்பு, காலி மற்றும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய துறைமுகங்களில் பொருட்களை ஏற்றி இறக்குவது நிறுத்தப்பட்டது. வீழ்ச்சி அடைந்திருந்த வர்த்தகத்தை மீண்டும் கட்டியெழுப்பவே ஒல்லாந்த வர்த்தக சங்கம் இத்தீர்மானத்தை எடுத்திருந்தது. எனினும், அக்காலத்தில் ஒல்லாந்தருடன் பிரான்சியர் கடும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனால், அவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக மன்னனுக்கு அறிவிக்க வர்த்தக சங்கம் முயற்சித்தது.

காலம் சென்ற ஹிர் ஆள்பதி அவர்களுக்கு பதிலாக சீமன்ஸ் அவர்கள் ஆள்பதியாக நியமனம் பெற்றார். அவரின் காலத்தில் இரு முக்கிய சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒன்று, தொழுநோய் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டமை. மற்றது, புகழ்பூத்த தேசவழமைச் சட்டத்தை அமுல்படுத்தியமை. வைத்தியர்களின் வேண்டுகோளின்படி, தொழுநோய் வைத்தியசாலை ஒன்று அவசியம் என்பதை நன்குணர்ந்த ஆள்பதி சீமன்ஸ், அதனை உயர் அதிகாரிகளிடம் வலியுறுத்தி வைத்தியசாலையைக்கட்டப் பெரும் முயற்சி எடுத்தார். எனினும், அதிகாரிகள் அம்முயற்சிகளைக் கைவிடவே விரும்பினர். எனினும், ஆள்பதி தொடர்ந்து வற்புறுத்தியதோடு, அதனை நடைமுறைப்படுத்துவ்தில் தீவிரமாகச் செயல்பட்டார். பின்னர் அரசாங்கத்தின் செலவில் அதனை வெற்றிகரமாக ஆள்பதி கட்டி முடித்தார். இதற்காக கொழும்பின் புறநகரப்பகுதியான வத்தளை-ஹெந்தலைப் பகுதியைத் தெரிவு செய்தார். ஒல்லாந்த வர்த்தக சங்கம் கொடுத்த பணத்தைவிட இருமடங்கு பணம் அதற்கு செலவாகியது.

அதன்பின் தொழுநோய் ஏற்பட்டவர்கள் அதுகுறித்து உடனே அரசுக்கு அறிவிக்க வேண்டும். அதை விடுத்து தொழுநோயாளி ஒருவர் கோட்டையில் அல்லது புறக்கோட்டையில் நடமாடிப் பிடிபட்டால் அவர் கயிற்றால் கட்டப்பட்டு கசையடிக்கு உட்படுவார் எனத் தெரிவித்து ஆள்பதி செய்தி ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

அதேபோல் தமிழ் மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தப்படும் 'தேசவழமைச் சட்டம்' எனும் புகழ் பெற்ற சட்டத்தை வழங்கிய பெருமை ஆள்பதி 'சிமென்ஸ்' அவர்களையே சாரும். அன்னார் நீதித்துறையில் மிகத் திறமை வாய்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/தர பரீட்சை சிக்கல்களை தீர்ப்பதற்கான பரீட்சைகள் கிளை முழு நாளும் திறந்திருக்கும்



க.பொ.த உயர் தரப் பரீட்சையின் அனுமதிப் பத்திரம் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக பரீட்சைகள் திணைக்களத்தின் 'பாடசாலை பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளை' ஆனது 24 மணிநேரமும் திறந்திருக்கும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கிளை கடந்த 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இம்மாதம் 22 ஆம் திகதி வரை 24 மணிநேரமும் செயற்பாட்டில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாரேனும் ஒரு பரீட்சார்த்திக்கு அவரது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ளல், நேர அட்டவணை தொடர்பிலான சிக்கல்கள், பாட மாற்றம் அல்லது வேறேதும் மாற்றங்கள் செய்யப்படவேண்டின் அது தொடர்பில் இந்தக் கிளைக்கு விஜயம் செய்து தீர்வினைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 011-2784208, 011-2784537 அல்லது 011-2786200 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பாடசாலை பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையுடன் தொடர்பினை ஏற்படுத்தலாம் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஓக:15-21 வரை டெங்கு ஒழிப்பு தேசிய சுகாதார வாரம்

## 4 தினங்கள் கட்டாய சுத்திகரிப்பு

ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரையிலான ஏழு நாட்கள் டெங்கு ஒழிப்பு தேசிய சுகாதார வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர; கடந்த 2, 9 ஆம் திகதிகளாகிய இரண்டு திங்கட்கிழமைகளும் டெங்கு ஒழிப்புத் தினங்களாக அறிவிக்கப்பட்டிருந்தன.அவ்வாறே, எதிர்வரும் 21, 28 ஆம் திகதிகளாகிய இரண்டு சனிக்கிழமைகளும் டெங்கு ஒழிப்புத் தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த தினங்களில் வீடு, வீட்டுத் தோட்டம், அரச-தனியார் நிறுவனங்கள் மற்றும் நிறுவனவளவு என்பனவற்றிலும் சுத்தப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது.

அநேகமான வீடுகளில் வீட்டுக் கூரைப் பீலிகளே டெங்கு நுளம்புகளின் பெருக்கத்திற்கான இடங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை களிலும் குப்பைகள் சேர்வதனால் அங்கும் நுளம்புப் பெருக்கத்திற்கு வழியேற்படுகின்றது.



டெங்கு ஒழிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள குறித்த 4 தினங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், வீடுவீடாகச் சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளை நியமிக்க உள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Vijey විජය விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

* பாடசாலை பேக்ஸ்,
* டீ-ஷேர்ட்ஸ்,
* டீ-மக்ஸ்,
* கெப்ஸ்களை

## வெல்லுங்கள்!

*இலங்கை வரைபடமானது பன்னிரெண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரிக்கப்படும். அவ்வாறு வாராவாரம் பிரசுரிக்கப்படுகின்ற பகுதிகளை தொடர்ச்சியாக சேகரித்து வாருங்கள். பன்னிரெண்டு பகுதிகளையும் சேகரித்த பின்னர், இலங்கையின் வரைபடம் முழுமைப்படும் வகையில் அவற்றை ஒழுங்கமைத்து-தபால் அட்டையில் ஒட்டி-எமக்குத் தபாலிட்டு பரிசுகளை சுவீகரித்துக்கொள்ளுங்கள். முழுமைப்படுத்தப்பட்ட வரைபடத்தை தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 011-2479653 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.*



### வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்

10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ் (School bags)
15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ் (T-Shirts)
100 பேருக்கு - கெப்ஸ் (Caps)
100 பேருக்கு - டீ-மக்ஸ் (Tea mugs)

### விதிமுறைகள்

- ஒருவர் எத்தனை தபாலட்டைகளையும் அனுப்பலாம்.
- முழுமைப்படுத்திய வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
- தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
- நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம்
இல: 5




# பாடசாலை விடுமுறை நாட்களில் விலங்கினக்காட்சிசாலையில் புதிய நிகழ்ச்சிகள்



தற்போது ஆரம்பமாகியுள்ள பாடசாலை விடுமுறைக் காலத்தில் தெஹிவளை விலங்கினக்காட்சிசாலையில் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி அறிவூட்டும் வகையிலான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதாக விலங்கினக்காட்சிசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அந்த நிகழ்ச்சித்திட்டங்களின்கீழ், வாரத்தின் சகல நாட்களிலும் மாலை 4.00 மணியிலிருந்து 4.15 மணி வரை கடல்சிங்க சாகஸக்காட்சியும் மாலை 4.30 மணிக்கு யானைகளின் சாகஸக் காட்சியும் நடாத்தப்படுகின்றன.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 2.30 மணியிலிருந்து 3.00 மணி வரை பாம்புகள் பற்றி செயல்முறை ரீதியான அறிவூட்டல் வழங்கப்படுவதோடு, பூனைக்குடும்பத்தைச் சேர்ந்த சிங்கங்கள், ஜகுவார், புலிகள் போன்ற விலங்குகள் குறித்த அறிவூட்டலும் வழங்கப்படுகின்றன.

இவைதவிர, பிற்பகல் 2.30 மணியிலிருந்து 3.00 மணி வரை சிம்பஞ்சி சாகஸக்காட்சியொன்றும் அண்மையில் பிறந்த 'எனகொன்டா'க்களைக் காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விலங்கினக்காட்சிசாலையின் கல்விப்பிரிவிற்குப் பொறுப்பான அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# உணவை வீணாக்கினால் அபராதம்!



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அமைந்துள்ள 'வாஃபூ' எனும் உணவகம் அங்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு புதிய விதிமுறைகளை விதித்துள்ளது. அங்கு கடமைபுரியும் தலைமை சமையலாளரின் திட்டமிடலுக்கு அமையவே உணவகத்தில் இந்த அதிரடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வாஃபூவில் உணவருந்துவதற்காக வருபவர்கள் தாம் வாங்கும் உணவுகளை மீதம் வைக்காமல் சாப்பிட வேண்டும். மீறி உணவுத் தட்டில் உணவை மீதம் வைத்தால் வாடிக்கையாளர்களிடம் இருந்து அதற்கான அபராதம் விதிக்கப்படுகின்றது. அத்துடன், மீண்டும் அந்த உணவகத்துக்கு வர வேண்டாம் என்றும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



அவ்வாறே, உணவை மீதம் வைக்காமல் சாப்பிடுபவர்களுக்கு அவர்களின் உணவுகளுக்கான மொத்த செலவில் 30% விலைக்கழிவும் வழங்கப்படுகின்றது. உணவின் முக்கியத்துவத்தையும் மகத்துவத்தையும் உணர்த்துவதற்கே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனையிட்டு, அந்த உணவகத்தில் உணவுகள் பற்றியும் உணவை வீணாக்குவதைத் தவிர்ப்பது குறித்தும் சிந்திக்கத் தூண்டும் வாசகங்களும் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. 'வாஃபூ' உணவகத்தின் இந்த மேன்மையான பணியினை முன்னிட்டு வாடிக்கையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு ஏற்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010 உலக தபால் தினத்தை முன்னிட்டு நடைபெறும் முத்திரைக் கண்காட்சிப் போட்டி

2010 உலக தபால் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நாடு பூராவும் முத்திரைக் கண்காட்சிப் போட்டிகளை நடத்தவதற்கு தபால் திணைக்கள முத்திரைப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## போட்டி விபரம்

இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்


தரம் - 5, 6, 7, 8
தரம் - 9, 10, 11, 12

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கண்காட்சிக்கான முத்திரைகளை தலைப்புகளுக்கு அமைய சமர்ப்பிக்க முடியும்.

இதனுடன், உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக் கமைய, A4 அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் வேண்டும். ஒரு தலைப்புக்குரிய முத்திரையை காட்சிப்படுத்துவதற்காக ஜிஎஸ்எம் 80 அல்லது அதற்கு அதிகமான A4 அளவுடைய வெள்ளைப் பிரதி பண்ணும் கடதாசியில் அல்லது அதற்காகத் தயாரிக்கப்பட்ட கடதாசியை (முத்திரைப் பணியகத்தில் கொள்வனவு செய்ய முடியும்) பாவிக்கமுடியும். ஒவ்வொரு பிரிவுக்குரிய கண்காட்சிக்கு வைக்க வேண்டிய கண்காட்சிப் பத்திரங்களின் தொகை பின்வருமாறு:

01. 5, 6, 7, 8 வகுப்புகள் 08 தாள்கள்
02. 9, 10, 11, 12 வகுப்புகள் 16 தாள்கள்

இந்தக் கடதாசி குத்தான பகுதி; அப்படியென்றால் நீளம் கூடிய பக்கம் சரிவான பகுதி நீளம் குறைந்த பக்கம் பாவித்து முத்திரைக் கண்காட்சிப் பத்திரம் தயாரிக்கவும். கண்காட்சிப் பத்திரத்தில் முத்திரையைப் பாதுகாப்பதற்கு முத்திரையைப் பாதுகாக்கும் 'ஹெவன் ஹின்ஜஸ்' பாவிக்கப்பட வேண்டுமென்பதுடன், அவற்றைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தால் வெள்ளை நிற எண்ணெய்க் கடதாசியைப் (ஒயில் பேப்பர்) பாவித்து பின்வரும் அமைப்பில் 'ஹின்ஜஸ்' தயாரிக்க முடியும்.




10 மி.மீ அகலமும் 15 மி.மீ நீளமும் உள்ள எண்ணெய்க் கடதாசியைத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். அதன்பின்னர் ஒரு பக்கம் 5 மி.மீ. அடுத்த பக்கத்துக்கு 10 மி.மீ உள்ளவாறு நீளப் பக்கத்தை மடிக்கவும். அப்பொழுது சிறிய பக்கத்தில் பசையைத் தடவி முத்திரைக்கும் பெரிய பகுதியில் பசையைத் தடவி காட்சிப்பக்கத்தையும் ஒட்டமுடியும். இதில் எக்காரணம் கொண்டும் நீரில் கரையாத பசை வகைகளைப் பாவிப்பதைத் தவிர்க்கவும். பாவிக்காத புதிய முத்திரைக்காக முத்திரை காக்கும் கூடுகளைப் பாவிப்பது பொருத்தமாகும்.

## கண்காட்சிக்கு எவ்வாறு தயார்படுத்துவது?

ஒரே ரகத்தில் ஒரு முத்திரை வீதத்தில் உங்களிடம் அதிகப்படியாக எந்த ரகத்திலான முத்திரை உள்ளதோ அந்த முத்திரைகளை சேகரித்துக் கொண்டு அதனைத் தலைப்பாகக் கொள்ளுங்கள்.

உதாரணமாக, நீங்கள் தெரிவு செய்த தலைப்பு மலர்கள் என வைத்துக்கொள்வோம். அதுவே, கண்காட்சியின் தலைப்பாகும். 'உலகை அலங்கரிக்கும் மலர்கள்' என்ற வகையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ரம்மியமான விளக்கக் குறிப்பையும் எழுதுங்கள்.

**தயார்படுத்தல்:**

- ஆரம்பமாக, முதல் பக்கத்தின் மேல் தலைப்பை எழுதவும்.
- அதன்பின்னர் ஆகக்கூடிய நாற்பது சொற்களை மட்டும் வரையறை கொண்டதாக தலைப்புக்குரிய சிறிய அறிமுகத்தை எழுதவும்.
- மிகுதிப் பக்கத்தில் முத்திரைகள் ஒட்டப்பட்டதற்கு அமைய, அதன் அமைப்புக்கள் பற்றி எழுதுவதற்காக ஐந்து அல்லது ஆறு வரிகளை எழுதுவதற்கு இடம் விடவும்.
- தலைப்புக்குரிய முதல் விடயம் சம்பந்தமாக உப தலைப்பு இலக்கம் 1 ஐப் பயன்படுத்தி காட்சிப் பக்கத்தின் இடது பக்கத்தில் எழுதவும். அதன்பின்னர் அந்த உப தலைப்புக்கான முத்திரை உள்ள பத்திரமே முதல் நாள் உறையை ஒட்டி, இல.1 இன் கீழ் உள்ள உப தலைப்புக்குரிய மிகவும் சிறு குறிப்பு முத்திரைக்குக் கீழ் அல்லது பக்கத்தில் எழுதவும்.
- இந்த அமைப்புக்கு இலக்கம் 2, 3, 4 என்ற உப தலைப்பாகக் கொண்டு மேற்படி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கவும். தலைப்புக்குரிய விடயங்களைக் கோவையிடுவது இந்தக் கண்காட்சிப் பத்திரம் நான்குக்கு மட்டும் வரையறுக்க வேண்டும்.
- ஒரு கண்காட்சிப் பத்திரத்தில் ஆகக் கூடுதலாக, முத்திரை ஆறு தொடக்கம் பத்து வரை ஒட்டமுடியும்.
- சிறுகுறிப்புக்கமைய, இறுதியாகத் தயாரிக்கப்பட்ட பக்கத்தில் முத்திரைகளைப் பரப்பிய வாறு காட்சியைத் தயாரித்து உரிய முறையில் முத்திரையையும் முத்திரையுடன் தொடர்பான பொருட்களையும் வைத்துக் கொள்ளவும்.



கண்காட்சிப் படுத்தலுக்கென தயார்படுத்தக்கூடிய கண்காட்சிப் பத்திரங்களின் மாதிரி அமைப்புக்கள்

## கண்காட்சிக்காக வழங்கும்பொழுது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

காட்சிப்பத்திரத்தில் மேல் வலது பக்க மூலையில் பக்க இலக்கத்தை இடவும். உங்களின் பெயர், தொலைபேசி இலக்கம் மற்றும் தனிப்பட்ட முகவரியையும் சகல பக்கத்திலும் பின்புறத்தில் எழுதவும் காட்சிப் பத்திரத்தை அளவாக தெளிவாகத் தெரியக்கூடிய 'பொலிதீன்' உறையிலிட்டு மூடி இருந்தால் மிகவும் பொருத்தம். ஆனால், எக்காரணம் கொண்டும் 'லெமினேட்' செய்யக்கூடாது.

காட்சிப் பத்திரம் மடிக்க முடியாத காட்போட்டில் செய்யப்பட்டு, பெரிய அளவுடைய கடித உறையிலிட்டு, பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் உங்கள் பாடசாலை அமைந்துள்ள பிரதேச தபால் அதிபருக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கோ, அல்லது நேரடியாகச் சென்று கையளிக்கவோ முடியும்.

**மேலதிக விபரங்களை அருகாமையிலுள்ள தபால் நிலையங்களில் அறியலாம். தொ.பே: 4927248**

முடிவுத் திகதி: ஒகஸ்ட் மாதம் 31.

## பரிசு

| பிரிவு | இடம் | பதக்கம் | பணப்பரிசு | நிலையான கட்டளை கணக்குப் பிரிவு |
|---|---|---|---|---|
| பிரிவு 1 | 1ம் இடம் | தங்கம் | ரூ.20,000.00 | ரூ.3,000.00 |
| (9,10,11,12,13 | 2ம் இடம் | வெள்ளி | ரூ.15,000.00 | ரூ.3,000.00 |
| வகுப்புகள்) | 3ம் இடம் | வெண்கலம் | ரூ.10,000.00 | ரூ.3,000.00 |
| பிரிவு 2 | 1ம் இடம் | தங்கம் | ரூ.15,000.00 | ரூ.3,000.00 |
| (5,6,7,8 | 2ம் இடம் | வெள்ளி | ரூ.10,000.00 | ரூ.3,000.00 |
| வகுப்புகள்) | 3ம் இடம் | வெண்கலம் | ரூ. 5,000.00 | ரூ.3,000.00 |

## பரிசுகளுக்கான தகைமையைப் பெறுதல்

- பதக்கம் - காட்சிக்காக ஒவ்வொரு பிரிவின் கீழ் ஆகக் குறைந்தது 80 புள்ளிகளைப் பெறுதல்வேண்டும்.
- பணப் பரிசு - காட்சிக்காக ஒவ்வொரு பிரிவின் கீழ் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளைப் பெறுதல்வேண்டும்.

உரிய முறையில் தயாரிக்கப்பட்ட மற்றைய சகல காட்சிகளுக்காகவும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். பரிசும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்ச்சி 2010 ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி நடைபெற உள்ள உலக தபால் தின தேசிய வைபவத்தில் வழங்கப்படும்.

முத்திரைக் கண்காட்சிப் போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சகல காட்சிகளும் பிரதேச உலக தபால் தின வைபவம் முடிந்ததும் உடனடியாக சொந்தக்காரர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவு [ ]

### 2010 உலக தபால் தினத்தை முன்னிட்டு நடைபெறும் முத்திரைக் கண்காட்சிப் போட்டி மாதிரி விண்ணப்பப்படிவம்

01. முழுப் பெயர்
தமிழில் ..........
ஆங்கில பெரிய எழுத்தில் ..........
02. கல்வி கற்கும் தரம் ..........
03. கல்வி கற்கும் பாடசாலை ..........
பாடசாலை முகவரி ..........
பாடசாலை தொலைபேசி இல: ..........
04. வீட்டு முகவரி ..........
வீட்டுத் தொலைபேசி இல: ..........
05. காட்சித் தலைப்பு ..........
06. காட்சியின் பக்க எண்ணிக்கை ..........

### பாடசாலை அதிபரின் சான்றிதழ்

பிரதேச தபால் அத்தியட்சகர்
பிரதேச தபால் அத்தியட்சகர் அலுவலகம்,
..........

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இம்முத்திரைக் காட்சி இப்பாடசாலையில் .......... ஆம் தரத்தில் கல்வி கற்கும் .......... மாணவ/மாணவியின் ஆக்கம் என்பதை உறுதி செய்கின்றேன்.

..........
பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

திகதி ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணியம் நிறைந்த 'ரமழான்'

"ரமழான் மாதம் எத்தகையதென்றால், அதில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும் தெளிவான சான்றுகளைக்கொண்டதாகவும் (நன்மை-தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல்-குர்ஆன் இறக்கியருளப் பெற்றது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ, அவர் அம்மாதம் (முழுவதும்) நோன்பு நோற்கவேண்டும்"

(அல்-குர்ஆன் 2:185)

அல்லாஹ்வின் அருள் நிறைந்த ரமழான் மாதம் மீண்டும் ஒருமுறை நம்மை வந்தடைந்துள்ளது. அதனை அடைந்துகொள்வதற்கான பாக்கியத்தை நாம் மீண்டும் பெற்றுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ். கிழக்கு வெளுக்கும் நேரத்திலிருந்து (சூரியன் உதிப்பதற்கு சுமார் 75 நிமிடங்களுக்கு முன்னால்) சூரியன் மறையும்வரை முஸ்லிம்களால் நோன்பு நோற்கப்படுகின்றது. இதன்போது, உணவுடன் பான வகைகளைத் தவிர்த்திருப்பதற்கும் ஒருவருக்குள் இருக்கின்ற ஆசாபாசங்கள், கோபதாபம், தன்நிலை மறக்கச் செய்யும் மகிழ்ச்சி ஆரவாரங்கள் உட்பட, அனைத்து உணர்வுகளையும் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டலை நோன்பு நம்முள் தோற்றுவிக்கின்றது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய வருடக்கணக்கின் ஒன்பதாம் மாதமான ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பது அல்லாஹ்வால் கடமையாக்கப்பட்டுள்ளது. அதனை பின்வரும் அல்-குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

"இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்பிருந்த சமூகங்களுக்கு நோன்பு நோற்பது விதியாக்கப்பட்டதுபோல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சம் உள்ளவர்களாக மாறலாம்" (அல்பகறா : 183)

"ஒவ்வொரு நன்மையான காரியத்துக்கும் பத்து முதல் எழுநூறு மடங்கு வரை கூலி வழங்கப்படுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்; நோன்பு எனக்குரியது. அதற்கான கூலியை நானே வழங்குவேன்" (முஸ்லிம், திர்மிதி)

எனவே, நோன்பு காலத்தில் முஸ்லிம்கள் மிக அதிகமாக நன்மையான காரியங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். ஐவேளை தொழுகை உட்பட மேலதிக தொழுகைகளில் ஈடுபடல், அல்-குர்ஆன் ஓதுதல், தர்மம் செய்தல் மற்றும் உடல், உள ரீதியான தீய செயல்களில் ஈடுபடுவதை விட்டும் தவிர்த்துக்கொள்ளவும் வேண்டும். இதன்மூலம் வாழ்நாள் பூராகவும் தீய செயல்களைத் தவிர்த்து, நன்மையான காரியங்களின்பால் அதிக நாட்டம் கொள்வதற்கான பயிற்சியையும் சந்தர்ப்பத்தையும் நோன்பு வழங்குகின்றது



## நோன்பின் போதான உணவு முறை

பொதுவாக, சில மணிநேரங்களுக்கு உணவையும் பானங்களையும் தவிர்த்திருத்தலானது சோர்வையும் தலைவலியையும் உண்டுபண்ணும். பசித்திருக்கும்போது குருதியில் க்ளுக்கோஸின் செறிவு குறைவடையும். இதன்போது மூளையின் நரம்புக் கலங்கள் செயற்படப் போதுமான க்ளுக்கோஸ் குறைவடைவதால் தலைவலி ஏற்படும். அவ்வாறே, நீண்ட நேரம் தாகித்திருக்கும்போது உடலில் நீரின் அளவு குறைவடைவதால், குருதியின் கனவளவு குறைவடைந்து, சோர்வுநிலை ஏற்படும். குருதிக் கனவளவில் ஏற்பட்ட குறைவு காரணமாக, மூளையினூடான குருதியோட்டம் மேலும் குறையும். இதனால், மூளைக்கு க்ளுக்கோஸ் கொண்டு செல்லப்படுவது மேலும் குறைந்து தலைவலி அதிகரிக்கும்.

உண்மையில் எமது பிழையான உணவுப் பழக்க வழக்கங்களே எமக்கு இந்த அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன. ஆனால், இதற்காகத்தான் நோன்பு ஆரம்பிப்பதற்கு சற்றுமுன் உணவருந்துவது ஊக்குவிக்கப்படுகின்றது. இதன்போது, பசித்திருப்பதற்குத் தேவையான க்ளுக்கோஸ் உடலில் சேமிக்கப்படுகின்றது. அத்துடன், நோன்பிருக்கும் தினங்களில் பேரீச்சம்பழத்துடனேயே குறித்த நோன்பு முடிவுக்குக் கொண்டுவரப்படுவதனால்,மிக அவசரமாக க்ளுக்கோஸ் உற்பத்தி செய்யப்பட்டு, குருதியில் க்ளுக்கோஸின் செறிவு சீராக்கப்படுகின்றது.

மாறாக, நோன்பு காலத்தில் உணவு உண்ண அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அதிகளவு இனிப்புப் பொருட்களை உட்கொள்ளல், விசேடமாக அதிகாலை உணவு உண்ணும் நேரத்தில் (ஸஹர் வேளை) இனிப்புப் பொருட்களை உட்கொள்ளல், அதிக எண்ணெய்த்தன்மையுள்ள உணவுகளை உட்கொள்ளல் போன்றன உடலியல் அசௌகரியங்களை ஏற்படுத்தலாம். எனவே, அம்முறைகளைத் தவிர்ப்பதனூடாக இப்பிரச்சினைகளிலிருந்து மீளலாம். அத்துடன், நோன்பு நாட்களின் இரவுகளில் அதிக நீர் (1.5l-2l) அருந்துவதன் மூலம் பகல் நேரத்தில் உடலில் நீரின் அளவு போதுமான அளவில் பேணப்படும்.

**நோன்பு காலத்திற்குப் பொருத்தமான உணவு அட்டவணை**

**நோன்பு பிடிக்கும்போது**

1. அளவான உணவு (இனிப்புகள் அற்ற, கொழுப்புகள்/எண்ணெய் குறைந்த உணவு)
2. அதிகளவு நீர்

**நோன்பு துறக்கும்போது**


1. சிறிதளவு இனிப்பு (3 அல்லது 5 பேரீச்சம்பழங்கள்)
2. அதிகளவு நீர்

**பின்னர்**

சிறிதளவு பால் அல்லது அளவான உணவு (இனிப்பு அற்ற, எண்ணெய் குறைந்த)

மேலுள்ள, மருத்துவபூர்வமான உணவு அட்டவணை முஹம்மது நபி(ஸல்) அவர்களின் உணவுப் பழக்கங்களுடன் பொருந்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

-வைத்தியர் ஹுஸ்னி ஜாபிர்



### ரமழான் மாதத்தின் சிறப்புக்கள் சில...

★ நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடையானது, அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியின் நறுமணத்தைவிட சிறந்ததாகும்.
★ சுவர்க்கம் செல்ல நபி (ஸல்) அவர்களால் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டதுதான் நோன்பு.
★ அல்லாஹ்வின் அடியானுக்காக நியாயத் தீர்ப்பு நாளில் நோன்பு, குர்ஆன் ஆகிய இரண்டும் சிபாரிசு செய்யக்கூடியவைகளாக இருக்கும்.
★ நோன்பு நரக நெருப்பை விட்டும் தூரமாக்கக்கூடியது.
★ நமது பாவங்கள் மன்னிக்கப்பட சிறந்த காலம் ரமழான் நோன்பு காலமாகும்.
★ சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படும் மாதம்.
★ நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படும் மாதம்.
★ ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகின்ற மாதம்.
★ நல்லதைத் தேடுவோர் அழைக்கப்படும் மாதம்.
★ நரகவாதிகள் விடுதலை அடையும் மாதம்.
★ ஆயிரம் மாதங்களைவிட சிறந்த லைலத்துல் கத்ர் எனும் இரவைக்கொண்ட மாதம்.
★ முன் பாவங்கள் மன்னிக்கப்படும் மாதம்.
★ இறையச்சத்தைப் பெறுவதற்கு சிறந்த பயிற்சியளிக்கப்படும் மாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மைக்ரொசொஃப்ட் நிறுவனத்தின் 'வின்டோஸ்' இயங்குமுறை செயற்பாட்டினால் கணினி இயந்திரம் அனைவராலும் இலகுவாகக் கையாளப்படக்கூடிய தன்மையை ஏற்படுத்தியது. 'கூகிள் சேர்ச் என்ஜின்' இணையத்தை அனைவரும் இலகுவில் கையாளும் வாய்ப்பைப் பெற்றுத்தந்தது. கணினியினூடாக இணையத்தொடர்பைக் கொண்டிருப்போருக்கு, பொழுதுபோக்கு அம்சங்களை வழங்கிய பெருமை Youtube யையே சேரும். இணையத்தளத்தை, மனித உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளும் ஒரு தளமாக மாற்றிய பெருமை facebook கையே சேரும்**



# இணையத்தளத்தினூட
# நட்பின் இதமான தென்

தற்போது, facebook நட்பு வட்டார இணையத்தளத்திற்குள் (www.facebook.com) சஞ்சரிப்போரின் எண்ணிக்கை 50 கோடியாகும். இவர்கள் அனைவரும் அன்னியோன்ய தோழமையைப் பேணுபவர்களாக உள்ளனர். நண்பர்களாகவும் நண்பிகளாகவும் உள்ளனர். இவர்கள் தமது facebook கணக்கை திறப்பது வெறுமனே இணையத்தள சேவையொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டுமல்ல. தமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பற்றி அறிந்து கொள்வதற்குமாகும். அதாவது, வீட்டு குடும்ப உறுப்பினர்கள் போன்று, கிராமத்தில் கிராமத்தவர்களைப் போன்று, ஒரு நாட்டின் இன மக்களைப் போன்று எனலாம்.




26 வயதான மார்க் ஷுக்கர்பர்க்




இந்த facebook உறுப்பினர்களை தனி நாடொன்றின் மக்கள் தொகையாகக் கருதினால் அது சனத்தொகையில் மூன்றாவது இடத்தைப் பெறும் நாடாக இருக்கும். இது இணையத்தினால் உருவாக்கப்பட்ட வியப்பான நாடாகும்.

இந்த facebook தேசம் சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது, 2004 ஆம் ஆண்டு ஹாவார்ட் பல்கலைக்கழக மாணவரான மாக் ஷுக்கர்பர்க் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. தனது விடுதி அறையில் இருந்து சிந்தித்துக் கொண்டிருந்த அவருக்கு பல்கலைக்கழகத்தின் கணினி வலையமைப்பு மற்றும் இணையத்தின் ஊடாக நண்பர்களை சந்திக்கும் ஒரு முறை குறித்து சிந்தனை தோன்றியது. இந்த சிந்தனையைச் செயற்படுத்திய அவர், ஹாவார்ட் பல்கலைக்கழக 'டிஜிட்டல்' நட்பு வட்டத்தை வடிவமைத்து உருவாக்கினார். அன்று கடந்து சென்ற 24 மணித்தியாலத்தில் ஹாவார்ட் மாணவ, மாணவியர் 1,200 பேர் அதனுடன் தொடர்பு கொண்டனர். 2005 ஆம் ஆண்டில் ஹாவார்ட் மாணவர்கள் நூறு பேரில் 85 பேர் facebook உறுப்பினர்களாக இருந்தனர். அன்று தொடக்கம் கடந்து சென்ற காலப்பகுதி வரை facebook பெரும் தொழில்துறையாக முன்னேறி வருகின்றது.

இணையத்தளத்தில் தகவல்களைத் தேடிக்கொள்ள Search Engine இணையத்திற்குள் அவசியம் பிரவேசிக்க வேண்டும். இதனால், பலரின் சிந்தனை என்னவெனில் உலகில் அதிகளவானோர் பயன்படுத்தும் கூகிள் சேர்ச் என்ஜினை மீறி பெரும் வளர்ச்சியை எந்த இணையத்தினாலும் அடைவது இலகுவான விடயம் அல்ல என்பதாகும். எனினும், facebook னால் இந்த எண்ணம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இணையத்தளங்களுக்குள் பிரவேசிப்பவர்கள் பற்றிய கணக்கீடுகளை மேற்கொள்ளும் பிரித்தானியாவின் ஹிட்வைஸ் (Hitwise) நிறுவனம் வெளியிட்ட புதிய அறிக்கையில், facebook நோக்கி வந்தவர்கள் எண்ணிக்கை கூகிளை நோக்கி வந்தவர்களை விட அதிகம் என்பதாகும்.

இவர்களில் அதிகமானோர்




## ஆரம்பம்

- ★ ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் மார்க் ஷுக்கர் பர்க் ஒன்லைன் நட்பு இணையத்தை ஆரம்பித்தார்.
- ★ facebook உறுப்பினர்கள் எண்ணிக்கை மில்லியன்களில் 800 மாணவர்களாக விஸ்தரிக்கப்பட்டது.
- ★ உலகில் அனைவருக்கும் facebook திறக்கப்பட்டது.
- ★ நியூஸ் Feed நண்பர்கள் தகவல்கள் செய்தியாக வெளியிடப்பட்டது.
- ★ facebook பீக்கன் வேறு இணையங்களில் மேற்கொள்ளப் படும் பணிகள் facebook தோழர்களுடன் பரிமாறிக் கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது.
- ★ facebook அட்ஸ் உறுப்பினர்கள் செயற்பாடுகளைக் கண்காணித்து அதற்குப் பொருந்தும் விளம்பரங்களை அனுப்பும் முறை ஆரம்பமானது.
- ★ facebook கனெக்ட் facebook ஊடாக வேறு இணையங் களுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.
- ★ facebook லைக் தமக்கு விருப்பமானவை இவை என நண்பர்களுக்கு உணரக்கூடிய ஐக்கன் (icon) அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
- ★ ஒப்பன் கிராப் பலதரப்பட்ட இணையத்தளங்களுடன் facebook உறுப்பினர்களின் தகவல்களை இணைத்து தமக்குத் தேவையான வகையில் facebook கணக்கினை தயாரித்துக் கொள்ளக்கூடிய முறையொன்று அறிமுகம்.
- ★ 50 கோடி பேர் இணையம் ஒன்றுடன் தொடர்பு கொண்டுள்ள அதிகமானோர் facebook கில் உள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ாக வீசும் ...றல்




இளைஞர் யுவதிகளாவர். 28 சதவீதமானவர்கள் 34 வயதிற்கும் மேற்பட்டவர்களாவர். இந்த வயதைச் சேர்ந்தவர்கள் தொகை அதிகரித்துச் செல்கின்றது. அதாவது, கொள்வனவு செய்யும் ஆற்றல் அதிகமுள்ளவர்கள் தொகை அதிகரித்துச் செல்கின்றது. இவர்கள் facebook நோக்கி செல்வத்தைக்கொண்டு செல்பவர்கள் எனலாம். அந்த வகையில், எமது விருப்பு, வெறுப்புக்கு இணங்க facebook நாம் வழங்கும் அனைத்துத் தகவல்களும் facebook இணையத்தளத்திற்கு வருமானமாகும். அவர்கள் இந்த தகவல்களை மிகவும் சூட்சுமமான முறையில் அறிந்து பாரிய விளம்பரச் சந்தையொன்றை உருவாக்கியுள்ளனர். இணையச் சேவைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் கொம்ஸ்கோர் (Comscore) நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளதன்படி இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் facebook இணையத்தைப் பயன்படுத்தியவர்களுக்கு காட்டப்பட்டுள்ள 'பெனர்' வடிவ விளம்பரங்களின் எண்ணிக்கை 17,600 கோடி. அதாவது, 176 பில்லியன்களாகும். இதனால், facebook நிறுவனம் உழைத்துள்ள பணத்தொகை 100 அ.டொலர்களுக்கும் அதிகமாகும்.

facebook இணையத்திற்கு பணம் வரும் முறையை, அதன் பிரதான செயற்பாட்டு அதிகாரியான ஷெரில் சென்ட்பேர்க் உருவாக்கினார். அவர் 'கூகிள்' நிறுவனத்தின் வர்த்தக விளம்பர முறையை வடிவமைத்ததில் முன்னோடியாகச் செயற்பட்டவர். இவர் 2008 இல் கூகிளைக் கைவிட்டு 'பேஸ்புக்' நிறுவனத்துடன் இணைந்து கொண்டார்.

'கூகிள்' நிறுவனம் வர்த்தக நிறுவனங்களுக்கான சமிக்ஞைகளை கூகிள் சேர்ச் என்ஜின் மற்றும் ஜிமெயில் கணக்குகளின் ஊடாகப் பெற்றுக்கொள்கின்றது. 'சேர்ச்' செய்யப் பயன்படும் சொற்கள், ஜிமெயில் ஊடாக ஈமெயில் அனுப்பும்போது அதில் உள்ள சொற்கள் ஆகியவற்றுக்குப் பொருந்தும் வகையில் அந்த சேர்ச் ரிஸ்ட்ஸ்க்கும் ஜிமெயிலுக்கும் விளம்பரங்கள் அனுப்புவது கூகிள் முறையாகும். இது இலக்கு நோக்கிய விளம்பரப்படுத்தல் (Targeted Advertising) எனப்படுகின்றது. எனினும், facebook முறை இதனைவிட வேறுபட்டது.

facebook பல்தரப்பட்ட உபாயங்களின் ஊடாக எமது மட்டுமன்றி, எமது நண்பர்கள், நண்பிகளின் விருப்பு வெறுப்புக்கள் பற்றிய தகவல்களையும் பெற்றுக்கொள்கின்றது. உதாரணமாக, facebook இல் உள்ள 'லைக்' (Like) எனப்படும் சிறப்புப் பகுதியை எடுத்துக் கொள்வோம். அந்த அழுத்தியை அழுத்தி எமக்கு விருப்பமானதைத் தெரிவு செய்துகொள்ள முடியும். facebook கில் இருக்கும் எமது நண்பர்கள் ஏதாவதொரு பான வகையினை 'Like' ஊடாக வழங்கினால், எமது facebook கணக்கிற்கு அந்த பானம் குறித்த விளம்பரம் வரும். அது சும்மா அல்ல. இந்த பானத்தை இந்த குறிப்பிட்ட நபர்கள் விரும்புகின்றனர் என்ற தகவலுடன் அவ்விளம்பரம் வரும். நண்பர்களுக்குப் பிடித்திருந்தால் நல்ல விடயமாகத்தான் இருக்கும் என்ற பொதுவான எண்ணம் சமூக ரீதியிலான தூண்டலினை ஏற்படுத்துகின்றது. இதனால், அந்த குறிப்பிட்ட பானத்தை அருந்தும் எண்ணம் தோன்றுகின்றது. இதற்கு அழுத்த ரீதியிலான விளம்பரம் (Pressure Advertising) என்று கூறப்படுகின்றது.


facebook தலைமை அலுவலகம்

விளம்பரத்தைப் பயனுள்ளதாக விளம்பரப்படுத்துவதற்காகவே விளம்பரதாரர்கள் பணம் வழங்குகின்றனர்.




facebook ஒரு விளம்பரம் ஒருவரை தேடிச் செல்வது இதயபூர்வமாகவே.அதாவது, நண்பர்களின் அழுத்தத்தினூடாகவே. இது பெரும்பாலும் விரயமாகாத முயற்சியாகும்.

facebook இணையத்தில் ஆங்காங்கே சேர்க்கப்படும் அனைத்து சிறப்பம்சங்களின் நோக்கம் மக்களின் விருப்பு, வெறுப்பு குறித்து உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதாகும். எப்பொழுதும் அனைவருக்கும் தமது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரியப்படுத்துவதற்கான களத்தை, மேடையை facebook ஏற்படுத்திக் கொடுக்கின்றது. எனினும், வெளிப்படையாக பேசும் மேடையின்முன் பேசும் நபர்களைத் தெரிவு செய்வது facebook அல்ல. இதனை நாமே தெரிவு செய்துகொள்ள வேண்டும். இவர்கள் பிறருக்குத் தெரியாத வகையில் facebook கில் ஒரு பாதுகாப்பு வலையத்தை உருவாக்கித் தருகின்றனர். அது 'செக்யூரிட்டி செட்டிங்ஸ்' ஊடாகவாகும். facebook பிரபலமடைவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இப்பொழுது நாம் 'facebook தேசம்' பற்றி உரையாடிக் கொண்டிருக்கின்றோம். இந்தக் கதையை முழுமையாக நாம் மட்டுமே அறிவோம். எனினும், இந்தக் கதைகளில் உருவாகும் முழு உலகுக்கும் தேவையானது பற்றி facebook மட்டுமே அறியும். தற்போது அதற்கு பொருந்தும் வகையிலான விளம்பரங்கள் facebook இணையத்தின் ஊடாக கிடைக்கும்.

இந்த வர்த்தக விளம்பரங்களினால் கிடைக்கும் வருமானத்தினால் தற்போது 26 வயதாகும் facebook உரிமையாளரும் அதன்

## facebook நட்புறவின் எழுச்சி

- 2004 முதல் 2010 ஜூன் வரை கடந்த 6 ஆண்டுகளில் facebook இணையத்திற்கு வந்து செல்லும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 கோடியாக உயர்ந்துள்ளது.
- facebook உறுப்பினர்களில் 70 சதவீதமானவர்களுக்கு அதிகமானவர்கள் அமெரிக்காவுக்கு வெளியே உள்ள நாடுகளில் வசிப்போராவர்.

உருவாக்குநருமான மார்க் ஷுக்கர்பர் பெரும் கோடீஸ்வரராகியுள்ளார். எனினும், அமெரிக்காவின் பாலோ அல்ட்டோவில் உள்ள facebook தலைமையகத்தில் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் பணியாற்றும் 1,400 ஊழியர்களுடன் அவரும் இணைந்து சரிக்கு சமமாகப் பணியாற்றுகின்றார்.

facebook தலைமையகமும் மிகவும் வியப்பானது. அங்கு பெயர்ப்பலகை இல்லை. அலுவலகத்தினுள் சிறிய சிறிய அறைகள் இல்லை. தனி அரங்காகும். அனைவரும் வெளிப்படையான முறையில் பணியாற்றுகின்றனர். ''எமது நிறுவனத்தின் நோக்கம் உலகை மிகவும் வெளிப்படையான இடமாக மாற்றுவதனைப் போன்று உலக மக்களை தொடர்புபடுத்துவதும் ஆகும். அப்படியெனின், நாம் அறைக்குள் இருந்தால் எப்படி?'' என்று facebook பிரதானி மார்க் ஷுக்கர்பர்க் கேட்கின்றார்.

இந்த அலுவலகத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் பலவாகும். facebook வலையமைப்பு தொடர்பாக சேரும் தகவல்களை முகாமைத்துவம் செய்வது பிரதான பணியாகும். ஒவ்வொரு மாதமும் facebook இணையத்திற்கு Text Lines 25 பில்லியன்கள் சேர்கின்றன. ஒரு வாரத்தில் சேரும் புதிய 'இமேஜஸ்' எண்ணிக்கை ஒரு பில்லியனாகும். ஒவ்வொரு மாதமும் வீடியோ கிளிப்ஸ் எண்ணிக்கை 20 மில்லியன்களாகும். இந்த தகவல்களை, விளம்பரப்படுத்தக்கூடிய தகவல்களாக மாற்றுவது பாலோ அல்ட்டோவில் உள்ள இந்த பிரதான அலுவலகமாகும்.

ஒரு இணையத்தின் மீது மக்களின் அபிப்பிராயம் கொள்ள சிறப்பம்சங்கள் மட்டும் காரணமல்ல. அதன் வடிவமைப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்தவகையில், facebook வடிவமைப்பு, அதில் சிறப்பம்சங்கள் சேர்க்கப்படும் வீதம் மற்றும் அதன் நிறப்பயன்பாடுகள் உலகில் எந்தவொரு கலாசாரத்தைக் கொண்டவர்களினதும் மனதினைக் கவரும் விதத்தில் அமைந்துள்ளது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். மறுபுறம் நவீன உலகின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து, அதற்கேற்ப சிறப்பம்சங்களை சேர்த்துக்கொள்வதாக facebook இணையத்தின் பிரதான பொறியியலாளர் ஜோஷ் வைஸ்மான் கூறுகின்றார். நட்புறவுக்கு மட்டுமே இடமளிப்பதனைத் தவிர, வேறு எந்தவித நோக்கமும் அற்ற உலக மக்களில் 50 கோடி பேரின் மனதைக் கவர்ந்துள்ள அதிர்ஷ்டத்தின் பொருள் அடிக்கடி மாறும் facebook இணையத்தின் வடிவமைப்பாகும்.

(இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தன்சானியா



தேசிய இலச்சினை



தன்சானியா நாடாளுமன்றம்



தலைநகரின் ஒருபக்கத் தோற்றம்

**அரசு:** குடியரசு

**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து- 1961 டிசம்பர் 9 ஆம் திகதி (தங்கன்யிகா); 1964 ஜனவரி 12 (சென்சிபார்); 1964 ஏப்ரல் 26 (மேர்கெர்).

**தேசிய பெயர்:** ஜம்ஹுூரியா மூன்கானோ வா தன்சானியா (United Republic of Tanzania).

**அதிபர்** (2005): ஜகாயா கிக்வெட்.

**பிரதமர்** (2008): மிஸென்கோ பின்டா.

## புவியியல்

இந்து சமுத்திரத்தின் கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு கிழக்காபிரிக்க நாடாகும். **வடக்கு**-உகண்டா, கென்யா; **மேற்கு**-புருண்டி, ருவாண்டா, கொங்கோ; **தெற்கு**-மொசெம்பிக், செம்பியா மற்றும் மலாவி ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. இந்நாடானது மாபியா,பெம்பா, சென்சிபார் போன்ற சில முக்கிய தீவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தன்சானியாவில் மேட்டுநிலங்களும் பரந்த புல்வெளிகளும் சமவெளிகளும் இடையிடையே குன்றுகளும் காணப்படுகின்றன. ஆபிரிக்காவின் மிகப்பெரிய ஏரிகளாக மலாவி ஏரி என அழைக்கப்படும் நியாஸா ஏரி, ஆபிரிக்காவின் மிகப்பெரிய ஏரியாகிய விக்டோரியா ஏரி, ஆபிரிக்காவின் மிக ஆழம்கூடிய ஏரியாகிய தங்கனிக்கா ஏரி என்பன இங்கு அமைந்துள்ளன. கிலோம்பெரோ, லுவேகு ஆகியன நாட்டின் மிக முக்கிய நதிகளாகும். கிரேட் ருஆஹா பெரியதோர் உபநதியாகும்.









**மொத்தப்பரப்பு:** 364,898 ச.மைல் (945,087 ச.கி.மீ); **நிலப்பரப்பு:** 342,100 ச.மைல் (886,039 ச.கி.மீ).

**தலைநகரம்** (2003): டொடோமா.

**உயர் சிகரம்:** கிளிமஞ்சாரோ மலை (19,340 அடி);

**தாழ் மையம்:** இந்து சமுத்திரம். **நிலப்பிரிவுகள்:** 25 பிராந்தியங்கள்.

**மொத்த சனத்தொகை** (2010): 41,892,895.

**நாணயம்:** தன்சானிய ஷில்லிங்.

**மொழிகள்:** ஸ்வாஹிலி, ஆங்கிலம் (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள்); அரபு, உள்ளூர் மொழிகள்.

**இனங்கள்:** ஆபிரிக்கர் 99%; ஆசிய, ஐரோப்பியர் மற்றும் அரேபியர் 1%.

**சமயம்:** கிறிஸ்தவம் 30%, இஸ்லாம் 35%, உள்ளூர் நம்பிக்கைகள் 35%.

**எழுத்தறிவு** (2003): 78%. **இணையத்தளக் குறியீடு:** .tz

**தொலைபேசிக் குறியீடு:** +255

**தேசிய கீதம்**

Mungu ibariki Afrika
Wabariki Viongozi wake
Hekima Umoja na Amani
Hizi ni ngao zetu..... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கி.பி 700 ஆம் ஆண்டுகளில் அரேபிய வர்த்தகர்கள் முதன் முதலில் இப்பிரதேசத்திற்கு வந்து குடியேற்றங்களை உருவாக்கினர். 1500 ஆண்டுகளில் போர்த்துக்கேயர் கரையோரப் பிராந்தியங்களுக்கு வந்து, அப்பிரதேசங்களை 17 ஆம் நூற்றாண்டு வரை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர்.அதன்பின், ஓமான் நாட்டின் சுல்தான் இப்பிரதேசத்தின் ஆட்சி அதிகாரத்தை தனதாக்கிக்கொண்டார். எனினும்,1885 இல் ஜேர்மனி இப்பிரதேசங்களைக் கைப்பற்றியதோடு, அருகில் உள்ள புருண்டி, ருவாண்டா ஆகிய நாடுகளையும் இணைத்து 'கிழக்காபிரிக்கா' என்ற பெயரில் தனது காலனித்துவத்தை நிறுவியது. முதலாம் உலக யுத்த முடிவில் ஜேர்மனி தோல்வி அடையவே பிரித்தானியாவின் நிர்வாகத்தின்கீழ் வந்ததோடு, பின்னர் ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பு பிரதேசத்திற்குள் உள்ளடக்கியது. 1961 இலிருந்து படிப்படியாக சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது.

## கலாசாரம்

தன்சானியாவின் இசை வடிவமானது, பாரம்பரிய ஆபிரிக்க இசையான போங்கோ ஃப்லேவாவை அடிப்படையாகக் கொண்டது. இந்நாட்டின் எழுத்தாளர்கள் பலர் இலக்கியத் துறையில் அழியாப் புகழை ஏற்படுத்தியுள்ளனர்.டிங்கடிங்கா மற்றும் மகோண்டே ஆகிய இரண்டு பாரம்பரிய நடனங்கள் திருமண வைபவங்களின்போது பிரசித்தி பெற்றுவிளங்கும்.



ஜனாதிபதி



பிரதமர்

## காலநிலை

இரண்டு மழைக்காலப் பருவங்களை இந்நாட்டில் காணலாம். மார்ச் முதல் ஜூன் வரையான காலம் ஓரளவு மழைவீழ்ச்சியைக்கொண்ட பருவமாகும். நொவெம்பர் முதல் ஜனவரி வரையிலான காலம் கடும் மழைவீழ்ச்சியைக்கொண்ட பருவமாகும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (1998): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் : 127,000; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 30,000. **வானொலி நிலையங்கள்** (1998): AM 12, FM 11,SW 2. **தொலைக்காட்சி நிலையங்கள்** (1999): 3. இணையத்தள வழங்குனர்கள் (2000) : 6; இணையத்தளப் பாவனையாளர்கள்: 300,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002: மொத்தம் 3,690 கி.மீ. **பெருந் தெருக்கள்** (1999): மொத்தம் 88,200 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 3,704 கி.மீ; செப்பனிடப்படாதவை 84,496 கி.மீ). **நீர்வழிப் போக்குவரத்து:** தங்கனிக்கா ஏரி, விக்டோரியா ஏரி, நியாஸா ஏரி. **துறையும் துறைமுகங்களும்:** புகோபா, டார்-உஸ்-ஸலாம், கிகோமா, கில்வா மசோகோ, லிண்டி, மிட்வரா, முவாண்ஸா, பங்கானி, டங்கா, வெடே, சென்சிபார். **விமான நிலையங்கள்** (2002): 123.




சென்சிபார் கல்லூர்க் கட்டடங்கள் சில

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 5%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோப்பி, தேயிலை, பருத்தி, புகையிலை, நவதானியம், கஸ்ஸாவா, பழவகைகள், மரக்கறி வகைகள், மாடுகள், ஆடுகள், செம்மறி ஆடுகள். **தொழிலாளர் தொகை** (2002): 20.04 மில்லியன். **கைத்தொழில்கள்:** சீனி, வைரங்கள், உப்பு, சீமெந்து, மர உற்பத்திகள், ஆடைகள், உர வகைகள். **இயற்கை வளங்கள்:** நீர் மின்வலு, இரும்புருக்கு, நிலக்கரி, வைரங்கள், இரத்தினக்கற்கள், தங்கம். **ஏற்றுமதிகள்** (2009): தங்கம், கோப்பி, மரமுந்திரிகை, பருத்தி உற்பத்திகள். **இறக்குமதிகள்** (2009): நுகர்வுப் பொருட்கள், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): இந்தியா, ஸ்பெய்ன்,நெதர்லாந்து, ஜப்பான், ஐக்கிய ராச்சியம், சீனா, கென்யா, தென் ஆபிரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐக்கிய அமெரிக்கா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ Ngorongoro எரிமலைவாய் ✱ ஓல்டுவாய் ஜோர்ஜ் தொல்பொருளியல் ஆய்விடம் ✱ சென்சிபார் கல்லூர் ✱ பைதுல் சாஹில் நூதனசாலை ✱ கிளிமஞ்சாரோ தேசிய பூங்கா ✱ கொன்டோவா ஐரங்கி சுவர் ஓவியங்கள் ✱ யும்பா யா சனா ஓவியக் கலையகம் ✱ மிகுமி தேசிய பூங்கா ✱ ருவாஹா தேசிய பூங்கா.








கிளிமஞ்சாரோ மலை

# அதிசயப் பறவை பென்குயின்







**பறக்க முடியாத பறவைகளில் பென்குயின் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவை கடும் குளிரிலும் கடலிலுள்ள பனிப்பாறைகளிலும் கூட்டமாக வாழும். கடலில் நீண்ட நேரம் மூழ்கி வாழும் அதிசயப் பறவைகள் இவை. இவை நிலத்திலும் அச்சமின்றிக் காணப்படும். அனேகமாக வெப்ப காலத்தில் சுறுசுறுப்பின்றிக் காணப்படும் இவை, சில வேளைகளில் அதிக வெப்பத்தின் காரணமாக இறந்தும் விடுகின்றன. பனிப்பாறைகள் நிறைந்துள்ள தென் துருவத்தில் இவை அதிகமாக காணப்படுகின்றன.**

பென்குயின்களில் சில சிற்றினங்கள் தென் ஆபிரிக்க கலபாகொஸ் தீவுகளில் காணப் படுகின்றன. ஆனால், வடதுருவத்தில் இவை காணப்படுவதில்லை. பென்குயின் களை 'ஊசி இறக்கைப் பறவைகள்'என்றும் கூறுவர். இவற்றின் கால்களும் அலகுகளும் சிவப்பு நிறமாகவும் உடல் கருநீல நிறமா கவும் உள்ளன, இவற்றில் 17 சிற்றினங்கள் தென் துருவத்திலும் 3 அல்லது 4 சிற்றி னங்கள் தென்துருவத்தின் ஏனைய பகுதிகளிலும் காணப்படுகின்றன.

## தனிப்பட்ட வகைப் பறவை

பரிணாமத்தின் ஆரம்ப



காலத்திலேயே பறக்கும் தன்மையை இழந்துவிட்ட இப்பறவைகள் நீரிலும் குளிரிலும் வாழத் தகுந்த தகவமைப்பை தாராளமாகக் கொண்டுள்ளன. இவற்றிற்குப் பறக்கும் பறவைகளுக்கு உள்ளது போல் இறக்கைகளும் கத்தி போன்ற மார்பு எலும்பும் உள்ளன. இவையும் 'பெட்ரெல்ஸ்' என்று அழைக்கப்படும் சமுத்திரத்தில் வாழும் ஒரு வகைப் பறவை இனமும் ஒரு பொது மூதாதையர் பிராணியிலி ருந்து தோன்றியிருக்க வேண்டுமென ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## பென்குயினின் இறகுகள்

பென்குயினுக்கு இறகுகள் உடல் முழுவதும் அதிகமாக அடர்ந்துள்ளன. இவ்வமைப்பு பார்வைக்கு மிக அழகாக உள்ளது என்னும் இந்த இறகுகள் பறக்க உதவியற் றவை. இந்த இறகின் இரு முனைகளும் கூர்மையாக உள்ளதுடன், தண்டுப்பகுதி தட்டையாகவுள்ளது.இறகுகள் அனைத்தும் ஒன்றன்மேல் ஒன்றாக பின் முனையை நோக்கி அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பானது நீர் உடலில் இருந்தும் இறகுகளிலிருந்தும் விரைவாகவும் இலகுவாகவும் வழிந்து செல்ல உதவுகின்றது. அத்துடன், ஏறக்குறைய ஒரு மாதம் வரை இவற்றின் இறகுகள் உதிர்வடைகின்றன. இக்காலத்தில் ஒரு பென்குயின் தன் உடலின் நிறையிலிருந்து சுமார் 40 சதவீத நிறையை இழந்துவிடுகிறது.

## பென்குயின்களின் உணவு

பென்குயின்களின் அலகுகள் மேல் நோக்கி அல்லது செங்குத்தாக அமைந்துள்ளன. இவை உயிருள்ள பிராணிகளைப் பிடித்து உண்ணுகின்றன. அதிகமாக இறால்கள், மெல்லுடலிகள், சிறுமீன்கள் மற்றும் சிறு செடிகொடிகளை உண்ணுகின்றன. சில வேளைகளில், முட்டைகளை யும் அவற்றிலுள்ள குஞ்சு களையும் உண்ணுகின் றன. கடலில் உள்ள லெப்பர்ட் சீல்களும் (Leopard Seals) கில்லர் திமிங்கிலங் களும் (Killer Whales) பென் குயின்களுக்கு எதிரி களாகும்.



## இனப்பெருக்கம்

ஆண் பென்குயினும் பெண் பென்குயினும் ஒரே உடல் வண்ணத்தைக் கொண்ட போதிலும் பெண் பறவை சற்று மங்கலான நிறத்தையும் சிறிய உடலை யும் கொண்டுள்ளது. இராஜ பென்குயின்கள் குளிர் காலத் திலும் ஏனைய பென் குயின்கள் வசந்த காலத்திலும் இனப்பெருக்கம் செய்கின்றன. கடலில் சில பறவைகள் மட்டும் சேர்ந்து நீந்திய பொழுதிலும் வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறைகளில் பல மில்லியன் கணக்கான பறவைகள் ஒன்றுகூடி பெருங்கூட்டமாகக் கடற்கரையை நாடி இனப் பெருக்கத்திற்காக வருகின்றன. ஆண் பறவைகள் கூழாங்கற்களைப் பொறுக்கி நீருக்கருகில் கூடுகளை கட்டுகின்றன. இவற்றில் சில கல்லுக்கடியில் அல்லது குகைகளில் வாழ்கின்றன.

ஆண் பறவைகள் முட்டைகளைக் கவனிக்க ஆரம்பித்தவுடன், பெண் பறவைகள் இரை தேடப் புறப்படுகின்றன. ஆண் பறவைகள் முட்டைகளை ஆறு வாரங்கள் வரை அடை காக்கின்றன.

## குஞ்சுகளின் உணவு

இக்காலகட்டத்தில் பெண் பறவைகளே உணவு தேடுகின்றன. அவை உணவுடன் திரும்பி வரும் வரையிலும் ஆண் பறவைகளே அடைகாக் கின்றன. மேலும் முட்டைகள் பொரிக்கும் வரையிலும்கூட ஆண் பறவை களே அடைகாக் கின்றன.

முட்டைகள் பொரித்த பிறகும் தாய், தந்தை, பறவைகள் குஞ்சுகளின் அருகிலேயே இருக்கும். பென்குயின்களின் குஞ்சுகள் கண் திறக்க நெடுங்காலம் எடுக்கும். கண்கள் திறக்கும்வரை உணவுகளை கடலில் பிடித்து வாயில் சேர்த்து வைத்து மீண்டும் கக்கி குஞ்சுகளுக்குக் கொடுக்கின்றன.

## பென்குயினின் பொது இயல்புகள்

பென்குயின்களுக்கு நீரில் நன்றாக நீந்தமுடியும். பறவை இனமாயினும் அதற்கு சிறகுகள் இல்லை. அதனால், அதற்குப் பறக்கமுடியாது. அதற்குப் பதிலாகத் துடுப்புகள் அமைந்துள்ளன. அந்தத் துடுப்புகளின் மூலமே பென்குயின்கள் நீந்துகின்றன.

பொதுவாகவே பென்குயின்கள் அடிப்படையில் மிகவும் சாதுவானவை. மனிதர்களுக்கு எவ்விதத்திலும் தீங்கு செய்யாதவை. உடலின் முன்புறம் வெள்ளையாகவும் பின்புறம் கறுப்பாகவும் காணப்படும். நீருக்கு வெளியே கூட்டமாகப் பென்குயின்கள் செல்லும்போது கறுப்பு நிறம் எதிரிக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். பென்குயின்களின் தோல் அமைப்பு குளிரைத்தாங்கக்கூடிய அளவிற்கு தடிப்பாகவும் முடிகள் அடர்ந்தும் காணப்படும்.

தோலைச் சுற்றி கொழுப்புப் போன்ற ஒருவித திரவம் சுரப்பதால் தோலில் நீர் சேர்வதில்லை. நீந்தும்போது வால் உடலைச் சமநிலையில் வைத்துக்கொள்ளப் பெரிதும் உதவுகின்றது.

**-இரஞ்சித் ஜெயகர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் I (கடந்த வாரத் தொடர்ச்சி...)

சுட்டெண்: ...................... நேரம்: 45 நிமிடங்கள்

27. இலங்கை, மேல் மாகாணம், கொழும்பு என்பனவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் 'C' இனால் காட்டப்படுவது;




(1) மேல் மாகாணம்
(2) இலங்கை
(3) கொழும்பு

★ ***28, 29 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழ் கோடிடுக.***

28. (1) கிளி, மைனா, புறா, கொக்கு (2) கட்டில், தளபாடம், மேசை, கதிரை
(3) வெண்டி, கெரட், கோவா, தக்காளி

29. (1) கறுப்பு, வெள்ளை, நிறம், சிவப்பு
(2) கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை
(3) காற்பந்தாட்டம், ஹொக்கி, கரப்பந்தாட்டம், கிரிக்கெட்

★ ***பந்தியை வாசித்து 30, 31 ஆம் வினாக்களுக்கு விடை தருக.***

> மாமா எங்களுக்குப் பந்துகள் வாங்கி வந்தார். நான் சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறப்பந்துகளையும் எனது சகோதரன் நீலம், பச்சை, வெள்ளை ஆகிய நிறப்பந்துகளையும் எனது சகோதரி ஊதா, நீலம், பச்சை ஆகிய பந்துகளையும் எடுத்துக்கொண்டோம்.

30. **நாங்கள் மூவரும் பெற்ற நிறப்பந்துகள் யாவை?**
(1) ஊதாவும் நீலமும் (2) சிவப்பும் பச்சையும் (3) நீலமும் பச்சையும்

31. **சகோதரி மாத்திரம் பெற்ற நிறப்பந்து எது?**
(1) வெள்ளை (2) ஊதா (3) சிவப்பு

★ ***பின்வரும் சொற்களை வாசித்து அதற்கேற்ப 32, 33ஆம் வினாக்களுக்கு விடை தருக.***


சத்தம் தொடர்ந்து போட்டிடுமே!
நித்தம் .....#..... காட்டிடுமே!
தத்தித் தத்திச் .........Δ.........
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே!

32. **# என்ற குறியீடு உள்ள இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.**
(1) அறையில் (2) வெளியில் (3) நீரில்

33. **Δ என்ற குறியீடு உள்ள இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.**
(1) பறந்திடுமே! (2) ஓடிடுமே! (3) சென்றிடுமே!

★ ***34 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.***


★ **குறித்த தாயக்கட்டை ஒன்று வைக்கப்பட்டுள்ள பல்வேறு முறைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. இத் தாயக்கட்டையில் A, B, C, D, E, F என்றவாறு முகங்களில் குறிக்கப்பட்டுள்ளன.**




34. **B முகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து எது?** ...........................

35. A முகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து எது?
...........................

36. இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள வடிவம் யாது?
...........................




★ ***37, 38 ஆம் வினாக்களில் விபரங்களினால் குறிக்கப்படும் சொற்களை எழுதுக.***

37. இது மூன்று எழுத்துக்களைக்கொண்ட ஒரு சொல்லாகும். முதலெழுத்து அவலில் உண்டு. அயலில் இல்லை. இரண்டாம் எழுத்து கரத்தில் உண்டு. களத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து கும்பியில் உண்டு. குடுமியில் இல்லை.
...........................

38. இது வீட்டுப்பாவனைப் பொருள் ஒன்று. முதல் எழுத்து கண்ணில் உண்டு. காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு. இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு. செவ்வாயில் இல்லை.
...........................

39. 'அ' என்பவர் 'ஆ' வின் தாய் ஆவார். ஆனால், 'ஆ', 'அ'வின் மகள் அல்ல. அப்படியாயின், 'ஆ' யார்?
...........................

40. தரப்பட்ட உருவை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?
...........................



## வினாத்தாள் I இன் விடைகள்

(ஒகஸ்ட் 04, 11 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *(01)* | 3 | *(02)* | 2 | *(03)* | 3 | *(04)* | 2 |
| *(05)* | 3 | *(06)* | 2 | *(07)* | 3 | *(08)* | 2 |
| *(09)* | 2 | *(10)* | 3 | *(11)* | 2 | *(12)* | 3 |
| *(13)* | 1 | *(14)* | 2 | *(15)* | 2 | *(16)* | 3 |
| *(17)* | 2 | *(18)* | 3 | *(19)* | 2 | *(20)* | 3 |
| *(21)* | 3 | *(22)* | 2 | *(23)* | 1 | *(24)* | 3 |
| *(25)* | 2 | *(26)* | 1 | *(27)* | 2 | *(28)* | 2 |
| *(29)* | 1 | *(30)* | 3 | *(31)* | 2 | *(32)* | 2 |
| *(33)* | 3 | *(34)* | F | *(35)* | E | *(36)* | ⊠ |
| *(37)* | வரம் | *(38)* | கத்தி | *(39)* | மகன் | *(40)* | 33 |

## வினாத்தாள் II

சுட்டெண்: ...................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. **பின்வரும் பாடலை வாசித்து (i) இலிருந்து (vii) வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

| | |
|---|---|
| கும்மியடி பெண்ணே கும்மியடி - நீ | சித்திரை வந்தது கும்மியடி - நீ |
| குனிந்து வளைந்து கும்மியடி | சிறப்புடன் வாழக் கும்மியடி |
| குழந்தைப் பெண்ணே கும்மியடி - நீ | சின்னப் பெண்ணே கும்மியடி - நீ |
| குலத்தைக் காத்திட கும்மியடி | சிட்டுப் போலக் கும்மியடி |
| தையும் பிறந்தது கும்மியடி - நீ | ஆடி பிறந்தது கும்மியடி - நீ |
| தரணி சிறக்கக் கும்மியடி | ஆடி மகிழக் கும்மியடி |
| தை தை என்றே கும்மியடி - நீ | ஆடிப்பெருக்கில் கும்மியடி - நீ |
| தைப் பொங்கலன்று கும்மியடி | ஆனந்தமாகக் கும்மியடி |

(i) 'தரணி' என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. ...........................
(ii) உயர்திணை பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. ...........................
(iii) 'ஆனந்தம்' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ...........................
(iv) காலப்பெயரைக் குறிக்கும் சொல் ஒன்றை எழுதுக. ...........................
(v) பாடலில் வந்த முன்னிலை ஒருமைச்சொல் ஒன்றை எழுதுக. ...........................
(vi) தைப்பொங்கல் யாருடைய பண்டிகை? ...........................
(vii) 'சின்னப்பெண்ணே கும்மியடி' என்னும் வாக்கியத்தில் உள்ள அடைமொழிச் சொல்லை எழுதுக. ...........................

02. **வெற்றிடத்துக்குப் பொருத்தமான மிகச் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**
(i) ........................ பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான்.
(உழவு, உலவு, உளவு)
(ii) காகம் அங்கும் இங்கும் ........................ இரை தேடியது.
(பரந்து, பறந்து, பறத்து)

03. **வாக்கியங்களை நன்கு வாசித்து, உரிய இடத்தில் நிறுத்தற்குறிகளை இடுக.**
(i) சங்கர் தனது தாயைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள்தானே என்று கேட்டான்
(ii) ஐயோ என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா

04. **சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.**
(i) இ.ஒ.கூ. ...........................
(ii) இ.மி.ச ...........................

05. **மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.**
(i) காது குத்துதல் - ...........................
(ii) இரண்டுங் கெட்டான் - ...........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

# கல்வி முகாமைத்துவம் - 15

## கற்றலுக்கான ஆலோசனைகள்





# சிறந்த மனப்பான்மையைப் பெறல்

கல்வியானது ஒழுக்கம் நிறைந்த புனிதமான ஒரு விடயமாகும். அதனை மாணவர்களாகிய நாம் பெற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்ளவும் நமது மனப்பான்மை பரிசுத்தமாக இருக்க வேண்டும். கல்வியில் நாம் கற்கும் முறை, நமது கல்விச் சிந்தனை, புலக்காட்சி ஆகியன யாவும் எமது மனப்பான்மையைப் பொறுத்தே அமைகின்றன.

மனப்பான்மை என்பது எம்முடன் கூடவே பிறந்ததன்று. மாறாக, அது தொடர்ச்சியான வளர்ச்சியின் விளைவாகவே ஏற்படுகின்றது. அந்த வளர்ச்சி வேகத்தில் சிறந்த மனப்பான்மையைப் பெறுவது ஒவ்வொரு மனிதனதும் சிந்தனையில்தான் தங்கியுள்ளது.

மனப்பான்மை பெறுவதில் எம்மைச் சுற்றியுள்ள சூழலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. உதாரணமாக; ஒருவன் ஒரு குழுவில் அங்கத்துவம் பெற்றிருந்தால், அக்குழுவிலுள்ள உறுப்பினர்களின் நடத்தைகள் அவனின் மனப்பான்மையைத் தோற்றுவிக்கும்.

அவ்வாறே, பாடசாலையிலும் ஊக்கமுள்ள மாணவர் குழுவில் ஒருவன் சேருவானாயின், அவன் கல்வி பற்றிய நல்ல மனப்பான்மையைப் பெறுவான். ஒரு குழுவின் மனப்பான்மைக்கு எதிரான மனப்பான்மையுடன் நாம் அதில் சேரமுடியாது. அத்துடன், இதுதான் சூழ்நிலை, விதி என்று எண்ணி அதனுடன் உடன்பட்டு நம் மனப்பான்மையை இசைவாக்குவதில் பயனில்லை. மாறாக, சூழ்நிலைகளை மாற்றியமைத்து, சிறந்த மனப்பான்மையைக் கட்டியெழுப்புவதில்தான் ஒருவனது சிறந்த மனப்பான்மை தோற்றுவிக்கப்படுகிறது.



(தொடரும்)

எம்.ஏ.எஃப்.சப்ரானா

# 'Teddy Bear' பெயர் வரக் காரணம்



பெரும்பாலானோர் விரும்பும் பொம்மை வகைகளில் ஒன்றுதான் 'கரடி பொம்மை' (Teddy Bear). இந்தக் கரடி பொம்மை முதன்முதலில் அமெரிக்காவிலேயே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அது 1902 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதக் காலப்பகுதியில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தின் அடிப்படையிலாகும்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவரான தியொடர் ரூஸ்வெல்ட், மிருகங்களை வேட்டையாடுவதில் அலாதிப் பிரியம் கொண்டிருந்தார். ஒருமுறை மிசிசிப்பி ஆளுநரின் அழைப்பின்பேரில் மிசிசிப்பி பகுதியில் வேட்டைக்குச் சென்ற ரூஸ்வெல்ட்டுக்கு ஒரு சிறிய கரடிக் குட்டியை இலகுவாக வேட்டையாடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்த போதும், அதனை வேட்டையாடாமல் விட்டுவிட்டார். இந்தச் செய்தி செய்தியாளர்களிடையே காட்டுத்தீ போல் பரவியதோடு, வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் அரசியல் கார்ட்டூனாகவும் வெளியாகியிருந்தது.

இந்த அரசியல் கார்ட்டூனால் கவரப்பட்ட பொம்மைத் தயாரிப்பு நிறுவனங்கள் சில அதனை உரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, கரடி பொம்மைகளைத் தயாரித்து விற்பனைக்கு விட்டன. எவ்வாறாயினும், இந்த பொம்மையை முதன்முதலில் உருவாக்கிய பெருமை அமெரிக்காவைச் சேர்ந்த மொரிஸ் மிக்டொம் என்பவரையே சாரும். மொரிஸ் சிறியதொரு அழகிய கரடி பொம்மையைத் தயாரித்து, அதனை ரூஸ்வெல்ட்டுக்கு அனுப்பி, ரூஸ்வெல்ட்டின் செல்லப் பெயரான 'Teddy' என்பதையே அந்தக் கரடி பொம்மைக்குரிய பெயராக சூட்டுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டார். அன்றிலிருந்துதான் கரடி பொம்மைகள் 'Teddy Bear' எனப் பெயர் பெறலாயின.



# ஷ்... உங்களுக்கு மட்டும்!

★ தேனீக்களுக்கு ஐந்து கண்கள் உள்ளன. அவை மணிக்கு 15 மைல்கள் வரை பறக்கும். அவை நிமிடத்திற்கு 11,400 முறை சிறகடிக்கும்.

★ நத்தைகள் Hermophrodites வகையைச் சார்ந்தவை. அவற்றின் ஒருபுறம் ஆண் இனப்பெருக்க உறுப்பும் மற்றொருபுறம் பெண் இனப்பெருக்க உறுப்பும் உள்ளன. நத்தைகளுக்கு செவிப்புலன் கிடையாது. எப்போதும் ஓர் ஒழுங்குமுறையான வட்டப் பாதையில் மட்டுமே போக்குவரத்தைக் கொண்டிருக்கும்.



★ அதிகமாக சிற்றுண்டி வகைகளை சாப்பிடும்போது தொடு உணவாகக்கொள்ளும் சோஸ் (Sauce) வகைகள், 1830 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மருந்தாகவே விற்பனை செய்யப்பட்டுள்ளன.




★ யானைகள் நாள் ஒன்றுக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே தூங்கும். குதிக்கத் தெரியாத பாலூட்டி விலங்குகளில் யானையும் அடக்கம். யானைகள் நீர் இருக்கும் இடத்தைக் கண்ணுக்கெட்டாத வெகு தொலைவிலிருந்தே நுகரும் ஆற்றலுடையவை.

★ பொதுவாக மீன்கள் ஒரு கண்ணை மட்டுமே சிமிட்டுகின்றன. ஆனால், சுறா மீன் மட்டும் அதன் இரண்டு கண்களையும் சிமிட்டும். உயிரினங்களில் சுறா மீனுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். குறிப்பாக, புற்றுநோய் வருவதற்கான சாத்தியமே அதற்குக் கிடையாது.



# விக்கல் ஏன், எவ்வாறு ஏற்படுகின்றது?




உணவை அசைபோட்டு மெதுவாக உண்ணாமல் வேகமாக உண்ணுவதாலோ அல்லது அதிக சூடான பானத்தைக் குடிப்பதாலோ பொதுவாக விக்கல் ஏற்படுகிறது. விக்கல் ஏன், எவ்வாறு ஏற்படுகின்றது என்று உங்களுக்குத் தெரியுமா?

வயிற்றையும் மார்பையும் இணைக்கும் 'உதரவிதானம்' பகுதியில் Phrenic nerves என்ற நரம்பு மண்டலம் உள்ளது. உணவை அவசரமாகச் [illegible] அருந்தினாலோ இந்த நரம்பு மண்டலம் எரிச்சலடைகின்றது. அப்போது, Phrenic nerves இன் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற, நமது சுவாசத்தை நிர்ணயிக்கின்ற டயாஃப்ரம் (Diaphragm) என்ற தசை இழுத்துக் கொள்கிறது. இதன் விளைவுதான் விக்கல்.

விக்கலை நிறுத்த, ஒரு கவளம் வெறும் சோற்றை விழுங்கி உடன் நீர் அருந்த வேண்டும் என்று கூறப்படுகின்றது. அப்படிச் செய்தால் கவனத் திருப்பம் ஏற்பட்டு, Phrenic nerves இயல்பு நிலைக்குத் திரும்புவதால் விக்கல் நின்றுவிடுகின்றது. இவ்வாறன்றி, சிலருக்கு அடிக்கடி விக்கல் ஏற்படுமாயின், நரம்பியல் நிபுணருடன் கலந்தாலோசிப்பதே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிச்சோகை ஏற்படுவ

**ஷீலா:** மாலா உனக்கு இம்முறை பரீட்சைகளுக்கு புள்ளிகள் குறைவல்லவா? பாடங்களை ஒழுங்காகப் படிக்கவில்லையா?

**மாலா:** நன்றாகத்தான் படித்தேன். ஆனால், என்னால் படித்ததை நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை ஷீலா.

**ஷீலா:** ஆசிரியர் படிப்பிக்கும்போது பாடத்தை சரியாகக் கவனிப்பதில்லை என்றும் உன்னை குறை கூறினார் அல்லவா?.

**மாலா:** எனக்கு பாடங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. எப்பொழுதும் உடலில் களைப்புத் தன்மை தெரிகின்றது. கடந்த மாதமும் சுகவீனமுற்று பல நாட்கள் பாடசாலை வரவில்லை. இதனால் பாடங்களைத் தவறவிட்டு விட்டேன். (மாலா கவலையுடன் கூறினாள். அப்போதுகூட அவளது உடல் சோர்ந்துபோய் இருந்தது)

இதற்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்து பார்த்ததில் மாலா குருதிச்சோகை நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியர் கூறினார். குருதிச்சோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு இவ்வாறான நோய் அறிகுறிகள் ஏற்படக்கூடும். இன்று நாட்டில் பரவலாகப் பேசப்படும் குருதிச்சோகை நோயானது இரும்புச்சத்துக் குறைபாட்டினாலேயே ஏற்படுகின்றது.

## உங்களுக்கும் குருதிச்சோகையா?

நீங்கள் இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் குருதிச்சோகையினால் பாதிக்கப் பட்டிருப்பீர்களாயின், உடலில் பலதரப்பட்ட நோய்கள் ஏற்படும். இதனால், உடலுக்கு பல இடையூறுகளும் ஏற்படும். எனவே, பின்வரும் நோய் அறிகுறிகள் குறித்து கவனத்தில் கொள்ளுங்கள்.

- நிறை குறைந்த சிசுவாகப் பிறத்தல்.
- துரிதகதியில் களைப்படைதல்.
- உற்சாகமின்மை.
- இலகுவில் நோய்களால் பீடிக்கப்படல்.
- அவதானிப்பு மற்றும் நினைவாற்றல் என்பன குறைதல்.
- உடல் வளர்ச்சியின் வேகம் குன்றுதல்.

## போஷாக்குப் பிரச்சினை


போஷாக்குப் பிரச்சினையானது பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றதாக அவதானிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒரு பிரதான சுகாதாரப் பிரச்சினையாகவும் இதனை அடையாளப்படுத்தலாம். இதற்குப் பிரதான காரணமாக இருப்பது இரும்புச்சத்துக் குறைபாடாகும். தவிர, ஏனைய ஊட்டச்சத்துக் குறைபாடுகளும் காரணமாகின்றன.

## குருதிச்சோகை என்றால் என்ன?

எமது உடல் செயற்பாட்டிற்கு குருதி உறுதுணையாக உள்ளது. குருதிக்கு சிவப்பு நிறத்தைக் கொடுப்பது செங்குருதிச் சிறுதுணிக்கைகளில் அடங்கியுள்ள ஹீமோக்ளோபின் ஆகும். உடலினுள் ஒட்சிசனைக் காவிச்செல்ல ஹீமோக்ளோபின் அவசியமாகின்றது. ஆனால், உங்கள் உடலில் இரும்புச்சத்துக் குறைவு ஏற்படின், குருதியில் உள்ள ஹீமோக்ளோபின் அளவும் குறைவடையும். இதனையே குருதிச்சோகை என்பர்.

## குருதிச்சோகை ஏற்படக் காரணம்

இரும்புச்சத்துக் குறைபாடே இதற்கு பிரதான காரணமாக அமைகின்றது. இதனைத் தவிர;விற்றமின் $B_{12}$ ஃபோலிக் அமிலம் மற்றும் பிரிடொக்சின் விற்றமின் போன்றனவற்றின் குறைவினாலும் இந்த நிலை ஏற்படும்.




## இந்நிலை தொடருமாயின்...

இந்த நிலை தொடர்ந்தால் உடல் வெளிறி விடுதல், நாக்கில் வெண்மை பூத்தல்,நாக்கின் மேற்பகுதியில் வேதனை போன்ற நோய்கள் ஏற்படக்கூடும்.


அண்மைய அறிக்கைகளின்படி, இளம்பிள்ளைகளில் (வயது 10-19) 22.3 சதவீதமானவர்கள் இரும்புச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப் பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்பிள்ளைகளாவர். இது 25.7 சதவீதம் ஆன உச்சநிலையாகும். இதில் ஆண் பிள்ளைகளின் அளவு 18.1 சதவீதம் ஆகக் காணப்படுகின்றது.

பொதுவாக இந்தப் பிரச்சினையை எதிர்கொள்பவர்கள் சிறு பிள்ளைகளும் பெண்களுமாவர். குறிப்பாக, பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்திலும் பாலூட்டும் போதும் உடலுக்கு அதிக இரும்புச்சத்துத் தேவைப்படுகின்றது. இச்சந்தர்ப்பங்களில் போதியளவு இரும்புச்சத்து கிடைக்காததனால் குருதிச்சோகை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

## இரும்புச்சத்தின் அவசியம்

வளரும் குழந்தைகளுக்கு இரும்புச்சத்தின் தேவை அதிகமாக உள்ளது. பிறப்பு முதல் இளம் பருவம் வரை 4 முதல் 4.5 கிராம் இரும்புச்சத்தின் அளவு உடலில் சேரும். இதில் வயதுக்கு வரும் பெண் பிள்ளைகளுக்கான இரும்புச்சத்தின் தேவை மிக அதிகமாகும். எந்தவொரு நபர்களினதும் பின்வரும் செயற்பாடுகளுக்கு இரும்புச்சத்து மிக அவசியமாகும்.

- உடலியல் மற்றும் உளவியல் வளர்ச்சி நிலையைப் பேண.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...தைத் தவிர்ப்போம்




- உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெருக்க.
- உற்சாகமான வாழ்வினை முன்னெடுக்க.
- நினைவாற்றல் மற்றும் அவதானிப்புத்திறனை அதிகரிக்க.
- கர்ப்பிணிக் காலத்தில் ஏற்படும் பலதரப்பட்ட உடல் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு.

## இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படுவது...

- அன்றாட உணவில் போதிய இரும்புச்சத்தின்மை.
- உணவில் உள்ள இரும்புச்சத்து சரியான முறையில் உடலினால் உறிஞ்சப்படாமை.
- குருதி வெளியேற்றம். (அவசர விபத்து, மாதவிடாய்,பிள்ளைப்பேறு)
- போஷாக்கின்மை/தொற்றுநோய் அபாயம். (கொளுக்கிப் புழு நோய், மலேரியா)

## இரும்பு என்றால் என்ன?

நாம் உண்ணும் உணவுகளில் உடலுக்குத் தேவையான இரும்புச்சத்தானது வெவ்வேறு அளவுகளில் அடங்கியுள்ளது. இது இரு வகைப்படும்.

- ஹீம் இரும்புச்சத்து (Heam Iron) மாமிச உணவுகளில் அடங்கியுள்ளது. உதாரணமாக; இறைச்சி, மீன், கருவாடு, நெத்தலி.
- ஹீம் இரும்புச்சத்து அற்ற (Non Heam Iron) உணவுகள். இது தாவர உணவுகள் மூலம் கிடைக்கும். உதாரணமாக; கீரை வகைகள், தானியங்கள், பருப்பு வகைகள், பழ வகைகள். இவற்றிலுள்ள இரும்புச் சத்துக்கள் அகத்துறிஞ்சப்படுவது சற்றுக் கடினமானதாகும். எனவே, அதற்கு கீழ்வரும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

## உடலுக்கு இரும்புச்சத்து உறிஞ்சப்படும் அளவை அதிகரித்துக்கொள்ள....



- விற்றமின் C உள்ள புதிய மரக்கறி, பழவகைகளை அதிகம் உண்ணல்.
- இயன்றளவு மாமிச உணவுகளை பிரதான உணவு வேளைகளின் போது சேர்த்துக்கொள்ளல்.
- உணவு சமைக்கும்போது தக்காளி, புளி, எலுமிச்சை போன்றவற்றை உணவில் கலந்து சமைத்தல். இதன்போது இவற்றிலுள்ள அமிலத்தன்மை உணவில் அடங்கியுள்ள இரும்புச்சத்தை உறிஞ்சுவதற்கு உதவும்.
- சில வகை உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர் கலவையை புளிக்க வைத்தல். அவ்வாறான உணவுகளையும் இடைக்கிடை சாப்பிடுதல். உ+ம் : அப்பம்,தோசை போன்றவை.
- கடலை, பயறு போன்ற தானிய வகைகளை 24 மணித்தியாலங்கள் நீரில் ஊறவைத்து, முளை வெளிப்படும்போது உணவாகக்கொள்ளல்.
- கோப்பி, தேநீர் போன்ற பானங்களை உணவு உட்கொண்டவுடன் அருந்துவதைத் தவிர்த்துக்கொள்ளல். ஏனெனில், அவை இரும்புச்சத்து உடலுக்குள் உறிஞ்சப்படுவதைத் தடுக்கின்றன. (இ)

## வயது மட்டத்திற்கு ஏற்ப இரும்பின் அளவு

| வயது | தேவையான இரும்பு (மி.கி) | |
|---|---|---|
| 1-2 | 9 | |
| 2-4 | 12 | |
| 4-6 | 12 | |
| | பெண் (மி.கி) | ஆண் (மி.கி) |
| 6-9 | 16 | 16 |
| 10-11 | 22 | 23 |
| 12-15 | 25-36 | 30 |
| 16-18 | 39 | 39 |

## இரும்புச்சத்து அதிகம் உள்ள உணவு வகைகள்

| உணவு | இரும்பு அடங்கியுள்ள அளவு(மி.கி) |
|---|---|
| சாவாலயா மீன் | 13.0 |
| சோயா | 11.5 |
| கடலை | 10.2 |
| ஈரல் | 7.0 |
| கிளவாளன் மீன் | 6.8 |
| குரக்கன் | 5.9 |
| கும்பலாவா மீன் | 4.5 |
| கௌபி | 5.9 |
| அரிசி (தவிடு நீக்காத) | 3.2 |
| கோதுமை | 2.5 |
| பசளை | 2.1 |
| முட்டை | 1.9 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புக்காக



குமார், ரவி இருவரும் நண்பர்கள். இருவரும் எட்டாம் தரத்தில் கல்வி பயின்று வந்தார்கள். அவர்களின் கிராமத்தில் வசதியான பணக்காரக் குடும்பம் என்றால் அது ரவியின் குடும்பம்தான். ஆனால், குமார் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவன். இருந்தாலும் ஏழ்மை, செல்வம் அவர்கள் நட்புக்குத் தடையாக இருக்கவில்லை. இவர்கள் இருவரும் 'நகமும் சதையும் போல' இணைபிரியாத நண்பர்களாக இருந்தார்கள். உயிரை விடவும் மேலாக அவர்கள் நட்பை மதித்தார்கள்.




பாடசாலைக்குச் செல்லும்போதும் வரும்போதும் இருவரும் ஒன்றாகவே சென்று வருவார்கள். ஒருநாள், ஏதோ தவிர்க்க முடியாத காரணத்தால் குமார் தனியாக வர நேரிட்டது. அது ஒரு காட்டு வழி. அவ்வேளையில் கொள்ளைக்காரன் ஒருவன் குமாரை வழி மறித்து ''நீ ரவியின் நண்பன்தானே. அவனிடம் நான் கேட்கும் அளவு பணத்தை வாங்கித் தரவேண்டும். இல்லையெனில் உன்னை உயிரோடு விடமாட்டேன்'' என்று பயமுறுத்தினான். அதைக் கேட்ட குமார் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் ''முடியாது'' என்று உறுதியாகக் கூறிவிட்டு அங்கிருந்து போக முனைந்தான்.

கொள்ளைக்காரன் குமாரைப் போகவிடாமல் வழி மறித்து ''ரவியிடம் எப்படியாவது பணத்தை வாங்கித் தா. அதனை இருவரும் பிரித்து எடுத்துக் கொள்ளலாம்'' என்று கூறினான். குமார் மீண்டும் மறுத்ததும் கொள்ளைக்காரனுக்கு கோபம் வந்துவிட்டது. கத்தியை எடுத்து குமாரைக் குத்துவதற்குத் தயாரானான்.

அந்த நேரம் ரவி அவ்வழியாக வந்தான். கொள்ளைக்காரன் குமாரின் வயிற்றைக் குறிபார்த்துக் குத்தும் நேரம் பார்த்து அதனைத்தடுப்பதற்கு ரவி குமாரின் முன்னால் பாய்ந்தான்.

அதனால், கத்தி ரவியின் வயிற்றைப் பதம் பார்த்தது. இதைச் சிறிதும் எதிர்பார்க்காத கொள்ளைக்காரன் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டான். குமார், ரவியை கையில் தாங்கியவாறு ''ஏனடா இப்படிச் செய்தாய். என்மீது பட்டிருந்தால்கூட இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க மாட்டேனே'' என்று கலங்கியபடியே உடனடியாக ரவியை தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றான். வைத்தியசாலையில் அவனை சிகிச்சைக்குச் சேர்த்துவிட்டு ரவியின் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றைக் கூறினான்.

நாட்கள் கழிந்தன. ரவி குணமடைந்து வீட்டுக்கு வந்தான். அதனை அறிந்த குமார் ரவியின் வீட்டுக்குச் சென்று ரவியின் உடல்நலம் பற்றி விசாரித்தான், அப்போது ரவி, ''என் உயிரைக் காப்பாற்றியதற்கு ரொம்ப நன்றி'' என்றான்.

அதற்குக் குமார் ''இல்லை. இல்லை நீதான் என் உயிரைக் காப்பாற்றினாய். அதற்கு நான்தான் உனக்கு நன்றி கூறவேண்டும்'' என்றான். இவ்வாறு ஒருவர் மாற்றி ஒருவர் கூறிக்கொண்டு அன்பினால் கட்டுண்டு அணைத்துக் கொண்டனர்.

**என்.எம்.பஸ்லான்,**
**தரம்-08, அந்-நூர் மு.மத்.கல்.,**
**பாணகமுவ.**



## சிறந்தவை

சிறந்த சிந்தனைகள் சிகரத்தையே
தொடச்செய்யும்
நல்ல பழக்கங்கள் நல்லவனாய்
மாறச்செய்யும்
வல்லமைகள் வாழ்வை நன்கு
செழிக்கச்செய்யும்
நல்ல நட்புக்கள் நண்பர்களுக்கு
உதவிசெய்யும்
படித்த பாடங்கள் பாரினிலே
உயரச்செய்யும்
காலத்தின் கோலங்கள் கடவுளை
நம்பச்செய்யும்

*து.டிலக்ஷினி, தரம்-9C*
*(மகாவலி),*
*ஊவா/விஞ்ஞானக் கல்.,*
*ஹாலி-எல.*

# காலம் பொன்னானது

காலம் பொன்னானது. அந்தவகையில், இழந்த நேரத்தை அல்லது காலத்தைப் பெற்றுக்கொள்ள எத்தகைய முயற்சியாலும் முடியாது.

ஒவ்வொரு நிமிடமும் மிகப் பெறுமதியானது. காலத்தின் பெறுமதியை விளக்க இப்படிச் சொல்வார்கள்.

ஒரு வருடத்தின் பெறுமதியை பரீட்சையில் சித்தி பெறத்தவறிய மாணவனிடம் கேட்டுப்பார்.

ஒரு மாதத்தின் பெறுமதியை தாய்மையடைந்திருக்கும் ஒரு பெண்ணிடம் கேட்டுப்பார்.



ஒரு வாரத்தின் பெறுமதியை ஒரு வாரப்பத்திரிகை ஆசிரியரிடம் கேட்டுப்பார்.

ஒரு நாளின் பெறுமதியை ஆயுள் தண்டனை பெற்ற கைதியிடம் கேட்டுப்பார்.

நிமிடத்தின் பெறுமதியை ரயிலைத் தவறவிட்ட ஒருவரிடம் கேட்டுப்பார்.

செக்கனின் பெறுமதியை ஓட்டப்பந்தயத்தில் தோற்றுப் போனவரிடம் கேட்டுப்பார்.


இப்படி ஒவ்வொரு விநாடியும் பெறுமதிமிக்கவை. நேரம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. எனவே, நாம் நேரத்தை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

'நன்றே செய்க அதை இன்றே செய்க' 'பருவமறிந்து பயிர் செய்' என்பார்கள் பெரியோர்.

காலமறிந்து செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். மாணவப் பருவம் கல்வி கற்பதற்கென்றே ஒதுக்கப்பட்ட பருவம். வீண் விநோதங்கள்,பொழுதுபோக்குகள் என்பவற்றில் காலத்தை விரயம் செய்து கல்விக்கான பருவத்தை வீணடித்தால் அதற்காக எதிர்காலத்தில் நாம்தான் வருந்த வேண்டியிருக்கும். எனவே, அன்றைய கடமைகளை எக்காரணம் கொண்டும் ஒத்திப்போடக்கூடாது. கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்துவோம். எதிர்கால வாழ்க்கையில் நல்லபடி முன்னேறுவோம்.

*எஸ்.எம்.நுஸ்கா, திகழி, ஏத்தாளை.*

# சின்னத் தம்பி




வீதியிலே நடந்து போகும்
சின்னத்தம்பி - என்றும்
கவனமாகச் செல்ல
வேண்டும் சின்னத்தம்பி

வீதியினைக் கடக்கும்போது
சின்னத்தம்பி என்றும்
இருபுறமும் பார்க்கவேண்டும்
சின்னத்தம்பி

மஞ்சள் கோட்டால் நடந்து
சென்றால்
சின்னத்தம்பி - என்றும்
ஆபத்தில்லை மறந்திடாதே
சின்னத்தம்பி

வீதி விதிகளை மதித்து நடந்தால்
சின்னத்தம்பி - என்றும்
விபத்துக்களைத் தவிர்த்திடலாம்
சின்னத்தம்பி

தொகுப்பு: ப.பிரணவன்,
தரம் - 08, சுழிபுரம்

# மூதாட்டியின் நம்பிக்கை

கிராமப்புறத்தைச் சேர்ந்த படிப்பறிவற்ற அந்த மூதாட்டிக்கு சுமார் 75 வயதிருக்கும் அவள் ஒருநாள், வைத்தியரிடம் வந்து தனக்கு அடிக்கடி ஏற்படும் வயிற்றுவலியைக் கூறி முறையிட்டாள். வைத்தியர் அவளை நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்துவிட்டு ஒரு காகிதத்தில் சில மருந்து மாத்திரைகளை எழுதி, ''இதை ஒரு நாளைக்கு மூன்றுவேளை சாப்பிடுங்கள். மூன்று நாட்கள் கழித்து மீண்டும் என்னிடம் வந்து வலி குணமாகிவிட்டதா? இல்லையா? என்று சொல்லுங்கள்'' என்று கூறி அத்துண்டை அவளிடம் கொடுத்தார்.



மூன்று நாட்களுக்குப் பின் மூதாட்டி வைத்தியரிடம் வந்து, ''சாமி! நீங்க நல்லா இருக்கனும். நீங்க கொடுத்த மருந்தை மூன்று வேளை சாப்பிட்டேன். எனட வயிற்றுவலி பஞ்சாப் பறந்துபோச்சு. நீங்க கைராசி வைத்தியர் சாமி'' என்று புகழ்ந்தாள். வைத்தியருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. ''சாமி திரும்பவும் வலி ஏற்பட்டால் சாப்பிடுவதற்கு அந்த மருந்தில் இன்னும் கொஞ்சம் தாருங்களேன்'' என்று மூதாட்டி வேண்டினாள். என்ன மருந்து எழுதிக்கொடுத்தோம் என்று வைத்தியருக்கு மறந்துபோய்விட்டது. ''பாட்டி அன்று நான் உங்களிடம் தந்த அந்த மருந்துத் துண்டைத் தாருங்கள்'' என்று வைத்தியர் கேட்டார்.

''நல்லாக் கேட்டீங்க சாமி! அதைத்தானே நான் மூன்று துண்டுகளாக நறுக்கி மூன்று வேளை சாப்பிட்டேன். எனக்கு நீண்ட காலமாக இருந்து வந்த வயிற்றுவலியும் குணமாகிவிட்டது'' என்றார். ''ஓ! அப்பாடியா இந்தத் துண்டையும் வைத்துக்கொள்ளுங்கள். வலி ஏற்பட்டால் இதை மூன்றுவேளை சாப்பிடுங்கள்'' என்று கூறினார் வைத்தியர்.

மூதாட்டியின் நோயைக் குணப்படுத்தியது அந்தக் காகிதத் துண்டா? இல்லவே இல்லை. அதை வலி போக்கும் மருந்து என்று அவள் நம்பினாளே அந்த நம்பிக்கைதான் அவளது வயிற்றுவலியைக் குணப்படுத்தியது.

ஆர்.சரீக் சுரையா,
நு/அல்-அரபா மு.வித்.,
கொரகோயா,
நாவலப்பிட்டிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவோடு உண்டால் அதிக பயன்தரும் நாவற்பழம்



இலங்கையில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட உலர் வலயங்களில் நாவற்பழங்கள் அதிகம் காண்ப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களிலும் கதைகளிலும்கூட பல சந்தர்ப்பங்களில் நாவற்பழம் குறிப்பிடப்பட்டுள்ளது. கருநீல வண்டைப் போல காட்சியளிக்கும் இப்பழமானது குறிப்பிட்ட சில பருவங்களில் மாத்திரமே கிடைக்கின்றன. பொதுவாக கிராமப் புறங்களில் அதிகம் கிடைக்கக்கூடிய பழமாகும்.

## நாவற்பழத்தின் இயல்புகள்

நாவற்பழத்தில் பலவகைகள் இருந்தாலும் நாட்டு நாவல், ஜம்பு நாவல் என இருவகையே பிரசித்தமானவை. இப்பழத்தில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு சுவைகள் கலந்திருக்கும். நாட்டு நாவற்பழத்தில் சதைப்பாகம் குறைவாக இருக்கும். ஜம்பு நாவற்பழத்தில் சதைப்பாகம் அதிகமாக இருக்கும்.

நாவற்பழத்தில் விற்றமின்கள் மிகக் குறைவாக இருக்கும் அதேவேளை, சுண்ணாம்புச் சத்தும் இரும்புச்சத்தும் சற்று அதிகமாகவே காணப்படுகின்றன. இப்பழம் குளிர்ச்சி தரவல்லது. எனவே, இப்பழத்தை அதிகம் உண்டால் தடிமன் அல்லது காய்ச்சல் என்பன ஏற்படலாம்.

நாவற்பழத்தை நாள்தோறும் உண்ணக்கூடாது. அவ்வாறு உண்டால் தொண்டைக்கட்டு ஏற்படலாம். இதனாலேயே சிறுவர்கள் இதனை அதிகம் உண்பதை பெரியவர்கள் தடுக்கின்றார்கள்.



நாவற் பழத்தை உண்ண விரும்புபவர்கள் சிறிதளவு பழத்தை போத்தலில் போட்டு சிறிதளவு உப்பைக் கலந்து உண்பதுதான் உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும். சத்துக்கள் அதிகமில்லாத பழமாக இருப்பினும் நாவற்பழமானது பல மருத்துவக் குணங்களைக் கொண்டது.

## நாவற்பழத்தின் மருத்துவக் குணங்கள்

### ✱ அதிக அளவில் சிறுநீர் கழிப்பவர்களுக்கு:

சிலர் அடிக்கடி சிறுநீர் கழித்துக்கொண்டே இருப்பர். சிலவேளைகளில் சிலருக்கு தம் சுய கட்டுப்பாட்டை மீறிகூட சிறுநீர் வெளியாவதுண்டு. இத்தகைய குறைபாடுள்ளவர்கள் தினமும் காலை உணவுக்குப் பின் ஐந்தாறு நாவற்பழங்களை தொடர்ந்து பத்து நாட்கள் உண்டு வரவேண்டும். இவ்வாறு செய்தால் இயற்கையான முறையில் சிறுநீர் கழிக்கும் நிலையில் நலம் பெறலாம்.

### ✱ இரத்தபேதி நிற்க:

ஏழு அல்லது எட்டு நாவற்பழங்களை எடுத்து அவற்றின் விதைகளை அகற்றிவிட்டு சதைப்பகுதியை நன்றாகப் பிசைந்து அதில் சர்க்கரை சேர்த்து பாகுபதத்தில் காய்ச்சி உட்கொண்டால் இரத்தபேதி நின்றுவிடும்.

### ✱ நீர்க்கடுப்பிற்கு அருமருந்து:

நான்கு நாட்களுக்கு தொடர்ந்து காலையில் மட்டும் ஐந்து நாவற்பழங்களை உண்டு வந்தால் அதிக உஷ்ணத்தால் ஏற்படும் நீர்க்கடுப்புக் குணமாகும்.

### ✱ நீரிழிவு நோய்க்கு அருமருந்து:

நாவற்பழக் கொட்டைகளை வெயிலில் நன்கு காயவைத்து நன்கு இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பொடியை காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு நீர் அருந்தி வர 30 நாட்களில் நீரிழிவு கட்டுப்பாட்டுக்குள் வரும். ஆரம்ப நீரிழிவு கண்டுபிடிக்கப்பட்டவுடன் இப்பொடியை சாப்பிட்டு வந்தால் 10 நாட்களில் குணம் தெரியும்.

## நாவற்பழத்தால் குணமாகக்கூடிய வேறு பல நோய்கள்

- ✱ கண் எரிச்சல் நீங்கும்.
- ✱ உடல் உஷணத்தைக் குறைக்கும்.
- ✱ மூல நோயைப் போக்கும்.
- ✱ வாய்வுத் தொல்லையைப் போக்கும்.

நாவற்பழங்களை அதிக அளவில் உண்டால்தான் நோய்கள் ஏற்படும். எனவே, அளவோடு உண்டு வளமோடு வாழலாம்.

(அ)

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3705
கிறிஸ்ரி நிஷாந்தன், தரம் - $9^{A}$, புனித பத்திரிசியார் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3706
ஏ.டிலோஷினி, தரம் - $8^{B}$, பரியோவான் த.ம.வித்., எம்பிலிபிட்டிய.


அங்.இல: 3707
சி.வசீகன், தரம் - 5, மா.சோ.வே.வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3708
எம்.றிம்ஸான், தரம் - 10, பாதிபிய்யா அ.கல்., திஹாரிய.


அங்.இல: 3709
சல்மான் ஹுஸைன், தரம் - $1^{A}$, மாளிகாஹேன மு.ம.வித்.,பேருவளை.


அங்.இல: 3710
எம்.மதுர்ஷிகா, தரம் - 2, மில்லகந்த த.ம.வித்., புளத்சிங்கள.


அங்.இல: 3711
ஜெ.அபிலாஷினி, தரம் - $3^{C}$, ஸ்ரீ சண்முகா இ.ம.கல்., திருகோணமலை.


அங்.இல: 3712
இ.வினோதாதேவி, தரம் - 11, இலுப்பைக்கடவை அ.த.க.பாட., மன்னார்.


அங்.இல: 3713
எஃப்.நிஸ்ரினா, தரம் - $6^{G}$, மின்ஹாத் தே.பாட., மாத்தறை.


அங்.இல: 3714
அஹ்மட் ஷவ்கி, தரம் - $8^{C}$, டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-8.


அங்.இல: 3715
ச.துஷான், தரம் - $4^{B}$, சைவப்பிரகாச ம.கல்., வவுனியா.


அங்.இல: 3716
இ.விமலாதேவி, உயர் தரம், பரிகாரிகண்டல் வித்., முருங்கன்.

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

பாடசாலை:..............................

வகுப்பு:..............................

திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஓவியம் வரைவோம் - 11

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

ஓவியப் பாடத்தில் அலங்காரங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. இம்முறை மலர்களைக் கொண்டு அலங்காரமொன்றை அமைப்போம். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள பயிற்சிகளை செய்து பாருங்கள்.

**பயிற்சி: 1**

இந்த அலங்காரங்களை துணிகள், தளபாடங்கள் போன்றவற்றில் காணலாம்.




**பயிற்சி: 2**

✱ முதலாவது படத்தின்படி, வட்டமொன்றை வரைந்துகொள்ளுங்கள்.

✱ 2 ஆவது படத்திற்கமைய, வட்டத்தின் மத்தியில் சிறிய வட்டமொன்றை அல்லது புள்ளியொன்றை வரையவும்.

✱ பின்னர் அதே வட்டத்தை ஐந்து சம பாகங்களாகப் பிரிக்கும்வகையில் ரேகைகளை வரைந்து கொள்ளவும்.



✱ 3 ஆவது படத்தில் உள்ளது போன்று பெரிய வட்டத்துடன் இணைந்தவாறு வளைகோடுகளை வரையுங்கள்.

✱ பின்னர் புள்ளிகள் அல்லது தேவையற்ற கோடுகளை அழித்துவிடவும்.

✱ நிறைவாக தேவைக்கேற்ப மலரில் கோடுகளை இட்டு, நிறம் தீட்டவும்.



குருநாகல், மிரிகம்பிடியைச் சேர்ந்த இர்பான்-ஜெஸ்மியா தம்பதியரின் செல்வப் புதல்வன் சப்னி அஹமட், 02.08.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா உட்பட குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



ஹொரணை, போர்த் வலயத்தைச் சேர்ந்த கனகராஜ்-மல்லிகா தம்பதியரின் செல்வப் புதல்வி தினுஷி பிரியங்கா, 07.08.2010 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



தெமட்டகொடையைச் சேர்ந்த சாந்தகுமார்-இந்திராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்ரித், 11.08.2010 (இன்று) தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அம்பாள் அருளில் பல்கலையும் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



யாழ்ப்பாணம், மாதகலைச் சேர்ந்த எட்வேட் பங்கிராஸ்-யூலியற் மெற்றில்டா தம்பதியரின் செல்வப் புதல்வன் மத்தியூஸ் ஷறோன், தனது மூன்றாவது பிறந்தநாளை 14.08.2010 அன்று கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறையருளோடு வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: ஆன் ஷாலினி



வவுனியா, தோணிக்கல்லைச் சேர்ந்த திவாகரன்-சுலோசனா தம்பதியரின் செல்வப் புதல்வி ஷஜீலா, 16.08.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை அப்பா (பிரான்ஸ்), அம்மா உட்பட குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:


கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



க.ஸ்ரீதேவி, தரம் - 10,
என்சல்வத்த த.க.வித்.,
தெனியாய.



சாலிஹா ஃபஹ்ருதீன்,
தரம் - 1,
நளீம் ஹாஜியார் பெ.கல்.,
சீனங்கோட்டை.




ஆதில் அஹ்மது, தரம் - 3^A,
ஸாதாத் ம.வித்., அகுரஸ்ஸ.



எம்.அக்லம், தரம் - 7,
கெங்கல்ல த.வித்., கெங்கல்ல.



எம்.ரிஹான், தரம் - 8^D,
அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாதகம.



பிரவின், தரம் - 3,
கிங்ஸ்டன் சர்வதேச பாட., கொழும்பு-15.




எஃப்.ஃபர்ஹா, தரம் - 11^A,
மெதடிஸ்ட் கல்., கந்தப்பளை.



எப்.நுஷ்ரா, தரம்-11,
அஸ்ஹர் கல்., அக்குறனை.



ராஜேஸ் தேவர்,
தரம் - 9^A, கொட்டகலை த.ம.வித்.,
கொட்டகலை.



ஷம்லா நஸீர், தரம் - 6^C,
அக்குறனை மு.பா.ம.வித்.,
அக்குறனை.



எஸ்.சஞ்ஜீவன்,
தரம் - 8^B,
பரியோவான் த.ம.வித்.,
இறக்குவானை.



க.நதீஷா, தரம் - 2,
கங்கேவத்த த.வித்.,
மஸ்கெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வறட்சி மிகுந்த கோடைகாலம். குடங்களை சைக்கிள்களில் கட்டிக்கொண்டும் தலையில் சுமந்து கொண்டும் அந்தக் கிராமத்து மக்கள் மற்றொரு கிராமத்தில் உள்ள நீர்நிலை ஒன்றை நாடிச் சென்று கொண்டிருந்தனர். மூட்டுவலியால் அவதிப்படும் தன் தாயாரை நீர் எடுத்துவர அனுப்பாமல், தானே சைக்கிளில் குடத்தைக் கட்டிக்கொண்டு நீர் எடுத்து வர ஆயத்தமானான் மணியரசு.

"தம்பி மணி, தினமும் விடியற்காலையில் எழுந்து நீருக்குப் போவதால் உன் படிப்புக் கெடுகிறதே?" என்று கவலையோடு கேட்டாள் மணியரசுவின் அம்மா வண்ணக்கிளி.

"அம்மா, உங்களால் முடிந்தநேரம் நீர் எடுத்தீர்கள். இப்ப மூட்டுவலியோட போய் நீர் எடுத்து வருவதைப் பார்க்கும்போது எனக்கு வேதனையாக இருக்கிறது. இதைப் பார்க்க என் மனம் பொறுக்கவில்லை அம்மா. சைக்கிள்தானே குடத்தைத் தூக்கி வருது. நான்தான் படிக்க வேண்டியதை இரவே படிச்சு முடித்து விடுகிறேனே" என்று பதில் கூறியபடி நீர் எடுத்து வரப் புறப்பட்டான் மணியரசு.

தொலைதூரத்தில் உள்ள கிராமத்தில் நீரைப் பிடித்துக் கொண்டு அந்தக் காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான் மணியரசு. அப்போது ஒரு மரத்தடியில் வயதான பாட்டி ஒருவர், "தண்ணீர்.... தண்ணீர்...." என்று தாகம் தாளாமல் குடங்களோடு



# பாட்டி தந்த பரிசு

போகிறவர்களைப் பார்த்துக் கெஞ்சினார். எல்லோரும் நீரைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். அவ்வளவு வறட்சி. இதைக் கவனித்த மணியரசன் பாட்டிக்கு நீர் கொடுத்தான்.

"தம்பி, பெரிய மனிதர்கள் கூட தவித்த வாய்க்கு நீர் கொடுக்க மனம் வரவில்லை. ஆனால், சின்னப் பையனான நீ, பல மைல் தூரம் சென்று எடுத்து வந்த தண்ணீரை எனக்குக் கொடுத்தாயே, இதுதான் பெரிய மனசு!" என்று வாழ்த்தினார் பாட்டி.

"அவர்கள் மேல் குற்றம் இல்லைப் பாட்டி. தண்ணீர்ப் பஞ்சம் அந்தளவுக்கு அவங்களை ஆட்டிப்படைக்குது"

"தம்பி, என்னிடம் ஒரு அதிசயக்கல் இருக்கிறது. இது மிகவும் சக்தி வாய்ந்தது. இதை ஒருமுறைதான் பயன்படுத்த வேண்டும். நீ என்ன கேட்டாலும் இந்தக் கல் தரும். இதை யாராவது ஒரு நல்லவனிடம் கொடுக்க வேண்டும் என்று காத்திருந்தேன். நீ தகுதி உள்ளவன், பெற்றுக்கொள்" என்று கல்லைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து விரைந்து சென்று மறைந்தார் பாட்டி.

மணியரசுக்கு ஒரே ஆச்சரியம்! அதை வீட்டிற்கு எடுத்து வந்து தன் தாயிடம் காட்டி நடந்ததைக் கூறினான்.

"மணியரசா, ஒருவர் நம்மை நம்பி ஒரு பொருளைக் கொடுத்தால் அதை முறையாக உபயோகப்படுத்த வேண்டும். உன்னிடம் தரப்பட்ட இந்தக் கல் ஊர் நன்மைக்காக இருக்கட்டும்" என்றாள் தாய் வண்ணக்கிளி.

"அதைத்தான் நானும் நினைத்தேன் அம்மா" என்றான் பெருமிதத்தோடு.

பொழுது விடிந்தது....

அந்தக் கிராமத்தில் உள்ள கிணறு, ஏரி, குளங்கள் என எல்லா இடங்களிலும் நீர் நிறைந்து காணப்பட்டது. இதற்குக் காரணம் மணியரசுதான் என அறிந்த ஊர்மக்கள் அவனை வாயார வாழ்த்தினர்.

"இந்த மந்திரக்கல்லை உன் சுயநலத்துக்குப் பயன்படுத்தி இருந்தால் நீ கோடீசுவரனாக மாறி இருக்கலாம். ஆனால், நீ பொதுமக்கள் நீருக்காகப்படும் துன்பம் போக்க உதவப் பயன்படுத்தியிருக்கிறாய். இது சாதாரண செயல் அல்ல. ஆண்டாண்டு காலமாக உள்ள தண்ணீர் பிரச்சினைக்கு நீ தீர்வு கண்டுள்ளாய். வறுமையிலும் நீ செய்த இந்த செயல் மிகப் பெரியது. இதற்காக உன் குடும்பத்துக்கு இந்தக் கிராம மக்கள் அனைவருமே கடமைப்பட்டிருக்கிறோம்" என்று பாராட்டி மகிழ்ந்தனர் ஊர்மக்கள்.




# பேராசையால் கிடைத்த தண்டனை

கோடை வெயில் சுள்ளென்று உறைத்தது. ஈக்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போயிற்று. அவை அங்குள்ள பாலில் விழுந்தன. சூப்பிலும் மைக்கூட்டிலும் புகுந்தன. ஹொய்யென்று இரைந்தன. சுற்றிச் சுற்றிப் பறந்தன. எல்லாவற்றிலும் மொய்த்துத் தொல்லை கொடுத்தன. நம்முடைய சிறிய ஈக்குஞ்சோ, பெரிய ஈ ஆகிவிட்டது. பல சந்தர்ப்பங்களில் அது பழக்கூழில் கால்களைவிட்டு விட்டு வெளியில் எடுக்கப் படாதபாடு பட்டது.

இரண்டாவது தடவை எரிந்து கொண்டிருந்த விளக்கின் மேல் தூக்கக் கலக்கத்தில் பாய்ந்து இறக்கைகளைப் பொசுக்கிக் கொள்ளப்பார்த்தது. மூன்றாவது தடவை ஜன்னலின் இரட்டைக் கதவுகளுக்கு இடையில் சிக்கிக் கொள்ளப் பார்த்து, மயிரிழையில் உயிர் தப்பிற்று. மொத்தத்தில் இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நிறையவே நிகழ்ந்தன.

"சீ..... என்ன இந்த ஈக்கள் பைத்தியம் பிடித்தவை போல எங்கும் நுழைகின்றன... முதலில் இவற்றை ஒழித்துக்கட்ட வேண்டும்" சமையல்காரி பாஷா ஆத்திரத்துடன் கத்தினாள்.

அப்புறம் நடந்தது பயங்கரம். ஒருநாள் காலையில் பாஷா உணவுப் பண்டங்களோடு அதிக ருசியான காகிதக் கட்டு ஒன்றையும் கொண்டு வந்தாள். அந்தக் காகிதங்களைத் தட்டுக்கள் மேல் பரப்பி, சர்க்கரை தூள் தூவி, வெந்நீர் விட்டதும் அவை ருசியுள்ள பதார்த்தம் ஆயின.

அத்தட்டுக்களை நன்றாகத் தெரியும் இடங்களில் வைத்த சமையல்காரி பாஷா, "இதோ ஈக்களுக்கு இன்று அருமையான விருந்து தயார்" என்றாள்.

ஏற்பாடுகள் தங்களுக்காகத்தான் நடக்கின்றன என்பதைப் பாஷா சொல்வதற்கு முன்பே ஊகித்துக்கொண்ட ஈக்கள் கும்மாளமடிக்கும் கும்பலாகப் புதிய அத்தின்பண்டத்தின் மேல் பாய்ந்தன. எங்களுடைய ஈயும் ஒரு தட்டின் மேல் பாய்ந்தது. ஆனால், அதை மற்றவை முரட்டுத்தனமாக நெட்டித் தள்ளிவிட்டன.

"என்ன இப்படி இடித்துத் தள்ளுகிறீர்கள், திருவாளர்களே?" என்று ஆத்திரப்பட்டது நமது ஈ. "நான் ஒன்றும் பேராசை பிடித்தவள் அல்ல. மற்றவர்களிடமிருந்து எதையும் பறித்துக் கொள்ளமாட்டேன். பார்க்கப் போனால் இது மரியாதை கெட்ட செயல்..."

பின்னர்தான் நடந்தது அசம்பாவிதம் ஒன்று. எல்லாவற்றிலும் பேராசை பிடித்த ஈக்களுக்கு முதலில் தண்டனை கிடைத்தது. அவை தொடக்கத்தில் குடி மயக்கத்தில் உள்ளவை போலத் திரிந்தன. பின்னர் ஒரேயடியாகச் சோர்ந்து விழுந்து விட்டன. மறுநாள் காலையில் பாஷா ஒரு பெரிய தாம்பாளம் நிறையச் செத்த ஈக்களைக் கூட்டி வாரிக்கொட்டினாள்.

எல்லாவற்றிலும் நல்லறிவுள்ள ஈக்கள் தாம் பிழைத்திருந்தன. அவற்றில் நம்முடைய ஈயும் ஒன்று.

மறுநாள், அந்த வீட்டில் அப்பா என அழைக்கப்பட்ட திருவாளர் மிகவும் அழகான மூன்று கண்ணாடி மூடிகளைக்கொண்டு வந்து, அவற்றில் பீரை ஊற்றித் தட்டுகளின் மேல் அவற்றை வைத்தார். எல்லாவற்றையும்விட நல்லறிவுள்ள ஈக்கள் கூட அவற்றில் சிக்கிக்கொண்டன. அந்த மூடிகள் ஈப்பொறிகள் என்பது பின்னரே தெரியவந்தது. பீர் மணத்துக்காகப் பறந்து வந்த ஈக்கள் மூடியில் சிக்கிக் கொண்டு, வெளியேவர வழி தெரியாமல் அங்கேயே மாண்டன.

இந்தத் தொல்லைகளின் காரணமாகவும் ஈக்களின் எண்ணிக்கை ஒரேயடியாகக் குறைந்தது. அதற்குள் கோடை காலம் கழிந்து மழை பெய்யத் தொடங்கியது. குளிர்காற்று வீசிற்று. மொத்தத்தில் பிடிக்காத சரிவராத பருவ நிலை வந்துவிட்டது. "கோடை காலம் கழிந்துவிட்டதா என்ன?" என்று ஆச்சரியப்பட்டன உயிர் பிழைத்திருந்த ஈக்கள். நின்று நிதானிப்பதற்குள் குளிர் மிகுந்த இலையுதிர் காலமும் வந்துவிட்டது"

நஞ்சு தடவிய காகிதங்களையும் கண்ணாடி ஈப்பொறிகளையும்விட இது மிக மோசமாக இருந்தது. கெட்ட பருவத்தின் தாக்குதலிலிருந்து தப்புவதற்கு ஈக்கள் தங்களுடைய மிகக்கொடிய பகைவனான திருவாளர் மனிதனிடம் தான் அடைக்கலம் புக வேண்டி இருந்தது. அத்துடன், எரிச்சலூட்டும் இப்பருவத்தில் ஜன்னல்கள் நாள் முழுவதும் மூடிக் கிடந்தன. சிறு பலகணித் திறப்புகள்கூட எப்போதாவதுதான் திறக்கப்பட்டன. வெகுளிகளான அறை ஈக்களை ஏமாற்றுவதற்காகவே வெயில்கூட அடித்தது போல் இருந்தது. காலை வேளை. ஜன்னல்களில் பளிச்சென்று அடிக்கும் வெயில் எல்லா ஈக்களையும் தோட்டத்துக்கு வரும்படி அழைப்பது போல் இருந்தது. கோடை காலம் திரும்பி வந்துவிட்டது என்று நம்பிய ஈக்கள் பலகணித் திறப்பு வழியாக வெளியே பறந்து போயின. ஆனால், வெயிலில் ஒளிதான் இருந்ததே தவிரச் சூடு இல்லை. ஈக்கள் மறுபடி வீட்டுக்குத் திரும்பி வர நினைத்தன. ஆனால், பலகணித் திறப்பு திடீர் என்று மூடப்பட்டதால் ஏராளமான ஈக்கள் குளிர் மிகுந்த இலையுதிர் கால இரவுகளில் சிக்கி மடிந்தன.

இலையுதிர் காலம் தொடங்கியது முதல் எல்லா ஈக்களுக்கும் ஒரே சோர்வும் சிடுசிடுப்பும் வந்துவிட்டன. அனேகமாக எல்லா ஈக்களின் சுபாவமும் நன்றாக மாறிவிட்டது. முன்பு இருந்த மகிழ்ச்சியின் சுவடே ஈக்களிடம் இல்லை. துயரமும் சோர்வும் அதிருப்தியும் அவற்றிடம் மிகுந்திருந்தன. சில ஈக்கள் கடிக்கும் அளவுக்குச் சிடுமூஞ்சிகள் ஆகிவிட்டன. முன்பு அவை இவ்வாறு கடிப்பதே இல்லை.



நம்முடைய ஈ தனக்குத்தானே அடையாளம் தெரியாதபடி சுபாவத்தில் ஒரேயடியாக மாறிவிட்டது. முன்பெல்லாம் மற்ற ஈக்கள் மடிந்தபோது அது இரக்கப்பட்டது. இப்போதோ, தன்னைப் பற்றி மட்டுமே எண்ணிற்று.

"செத்தால் சாகட்டும். எனக்கு அதிக பண்டங்கள் கிடைக்கும்" என்ற தன்னுடைய எண்ணத்தை வெளியே சொல்ல முடியாமல் திண்டாடியது.

அதன் எண்ணங்களுக்கு ஏற்றாற்போல மற்ற ஈக்கள் நூற்றுக்கணக்கில் மடிந்தன. நாளுக்கு நாள் அவைகளுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டே போயிற்று. அவற்றுக்கு நஞ்சு தடவிய காகிதங்களோ, கண்ணாடி ஈப்பொறிகளுக்கான தேவையே ஏற்படவில்லை. ஆனால், நம்முடைய ஈக்கு இதுவும் போதவில்லை. தன்னந்தனியாகத் தான் மட்டும் மிஞ்சவேண்டும் என்று அது ஆசைப்பட்டது. அந்த வீட்டில் உள்ள ஐந்து அறைகளிலும் தான் மட்டும் உல்லாசமாக வாழப் பிரியப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாலா, சீதா, தங்கை ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

සීතා: **ආ... මාලා, එන්න... එන්න.**
ஆ... மாலா, என்ன.... என்ன.
சீதா: ஆ.... மாலா, வாருங்கள்..... வாருங்கள்.

**මම බලාගෙන හිටියා.**
மம பளாகென ஹிடியா.
நான் பார்த்துக்கொண்டிருந்தேன்.



**එන්න නංගි.**
என்ன நங்கி.
வாருங்கள் தங்கை.

මාලා: **ටිකක් පරක්කුවුනා සීතා.**
டிகக் பறக்குவுனா சீதா.
மாலா: கொஞ்சம் நேரம் போய்விட்டது சீதா.

සීතා: **ඒකට කමක් නැහැ, ආවානේ.**
ஏகட கமக் நெஹே, ஆவானே.
சீதா: அதற்குப் பரவாயில்லை, வந்துவிட்டீர்கள்தானே.

**අම්මේ මෙන්න මාලා ආවා.**
அம்மே மென்ன மாலா ஆவா.
அம்மா இதோ மாலா வந்துவிட்டாள்.



අම්මා: **ආ... එන්න දුව.**
ஆ... என்ன துவ.
அம்மா: ஆ.... வாருங்கள் மகள்.

**නංගිත් ඇවිත්. නංගි දැන් උස ගිහින්.**
நங்கித் எவித். நங்கி தென் உஸ கிஹின்.
தங்கையும் வந்திருக்கிறாள். தங்கை இப்போது உயரமாகிவிட்டாள்.

සීතා: **මාලා එන්න මගේ යාලුවන්ව හඳුන්වලා දෙන්න.**
மாலா என்ன மகே யாலுவன்வ ஹதுன்வலா தென்ன.
சீதா: மாலா வாருங்கள் என்னுடைய தோழிகளை அறிமுகப்படுத்துகிறேன்.

මාලා: **යමු නංගි.**
யமு நங்கி.
மாலா: போவோம் தங்கை.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* மாலா வாருங்கள்.
මාලා එන්න.

i. கொஞ்சம் நேரம் போய்விட்டது சீதா.
..............................................................................

ii. தங்கை இப்போது உயரமாகிவிட்டாள்.
..............................................................................

iii. என்னுடைய தோழிகளை அறிமுகப்படுத்துகிறேன்.
..............................................................................






நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களை (Present Perfect Tense) இறந்தகால தனி வாக்கியங்களுடன் (Past Simple Tense) ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) They went to Badulla this morning.
அவர்கள் இன்று காலை பதுளைக்குச் சென்றார்கள்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

✱ They went. (Simple Verb)
அவர்கள் போனார்கள். (தனி வினைச்சொல்)

(ஆ) They have already gone to Badulla.
அவர்கள் ஏற்கனவே பதுளைக்குப் போய்விட்டார்கள்.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense)

✱ They have gone. (Compound Verb)
அவர்கள் போய்விட்டார்கள். (கூட்டு வினைச்சொல்)

---

(இ) We came here yesterday.
நாங்கள் இங்கே நேற்று வந்தோம்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

✱ We came. (Simple Verb)
நாங்கள் வந்தோம். (தனி வினைச்சொல்)

(ஈ) We have just come here.
நாங்கள் இங்கே தற்போதுதான் வந்துள்ளோம்.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense)

✱ We have come. (Compound Verb)
நாங்கள் வந்துள்ளோம். (கூட்டு வினைச்சொல்)

---

(உ) You told me that story yesterday.
நீ எனக்கு அந்தக் கதையை நேற்றுக் கூறினாய்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

✱ You told. (Simple Verb)
நீ கூறினாய். (தனி வினைச்சொல்)

(ஊ) You have just told me that story.
நீ எனக்கு அந்தக் கதையை தற்போதுதான் கூறியுள்ளாய்.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense)

✱ You have told. (Compound Verb)
நீ கூறியுள்ளாய். (கூட்டு வினைச்சொல்)

---

(எ) I did that work yesterday.
நான் அந்த வேலையை நேற்றுச் செய்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஏ) I have already done that work.
நான் அந்த வேலையை ஏற்கனவே செய்துவிட்டேன்.
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் - Present Perfect Tense)

✱ **குறிப்பு:** மேற்படி முதலாவது (எ) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள **'did'** எனும் வினைச்சொல், தனி வினைச்சொல் (Simple Verb) ஆகும். அவ்வாறே, இரண்டாவது வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள **have done** ஆகிய இரண்டு வினைச்சொற்களும் ஒன்று சேர்ந்து, ஒரு கூட்டு வினைச்சொல்லாக (Compound Verb) இயங்கியுள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/தர மாணவர்களுக்கான பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள்




***க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 2010 ஆம் ஆண்டில் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி இதுவரை வெளியிடப்பட்ட மாதிரி வினாக்களை மாணவர்கள் கிரகித்து அதன் பயனை அடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.***

***எனவே, இன்னும் இரண்டு வாரங்களே பரீட்சைக்கு இருப்பதால் மாணவர்களின் நன்மை கருதி, பொது அறிவு சம்பந்தமான சமகால நிகழ்வுகளை தகவல் வடிவில் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.***

***ஏற்கனவே தரப்பட்ட ஒரு வினாவுக்குரிய விடையன்றி, ஏனைய தரவுகளும் தகவல்களும் பொது அறிவு சம்பந்தப்பட்டவை என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும். இங்கே தரப்படும் பொது அறிவுடன் கூடிய சமகால நிகழ்வுகளை உள்ளடக்கிய தகவல்கள் அரசாங்கத்தால் நடாத்தப்படும் சகலவிதமான போட்டிப் பரீட்சைகளுக்கும் அவசியமானது என்பது குறிப்பிடத்தக்கது.*** **(-ஆசிரியர்)**

**வழங்குபவர்: உடுவை பரந்தாமன்**

***2010 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை மாணவர்களுக்கும் பொது பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கும் ஏற்றவாறு தொகுக்கப்பட்டுள்ளது.***

**ஐக்கிய இராச்சியத்தின் புதிய பிரதமர் 'டேவிட் கெமரன் வயது (43):**

2010.05.06 இல் நடைபெற்ற தேர்தலின் பின்னர் 'லிபரல்' கட்சியுடன் இணைந்து இவர் கூட்டு



அரசாங்கம் ஒன்றை அமைத்தார். கடந்த 197 வருடங்களின் பின்னர் பதவியேற்ற வயது குறைந்த பிரதமர் இவரே.

**யுகியோ அடயோமா:**

2009.08.30 இல் ஜப்பானில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யுகியோ அடயோமாவின் 'லிபரல்' கட்சி வெற்றி பெற்றது. 50 வருடங்களின் பின்னர் எதிர்க்கட்சி ஒன்று பெற்ற வெற்றி இதுவாகும்.



எனினும், இவர் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் போனமையால் 2010 இல் தனது பிரதமர் பதவியை இராஜினாமச் செய்தார்.

**ஜனாதிபதி தேர்தல்களும் பிரச்சினைகளும்:**

**ஆப்கானிஸ்தான்** - 2009 ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஹமித் கர்சாய் மீண்டும் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவானார்.



இவரை எதிர்த்துப் போட்டியிட்ட அப்துல்லா இத்தேர்தல் ஊழல் நிறைந்த தேர்தல் எனக் குற்றம் சுமத்திப் போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால், பல உயிர்களும் கோடிக்கணக்கான சொத்துக்களும் அழிக்கப்பட்டன. இறுதியில் ஹமித் கர்சாய் மீண்டும் தேர்தல் நடாத்தப்படும் என அறிவித்தார். எனினும், எதிர்க்கட்சி இதற்கு முன்வரவில்லை.

**ஈரான்**-2009 இல் ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஊழல் இடம்பெற்றதாகக் கூறி எதிர்க்கட்சி வேட்பாளர் மெஹ்கி இப்ராஹிம் பாரிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்.



இதனால், அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இறுதியில் ஆயதுல்லா தலையிட்டு மீண்டும் ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படும் என அறிவித்தார். ஆனால், எதிர்க்கட்சி வேட்பாளர் அதில் போட்டியிட முன்ரவில்லை. இதனால், அஹ்மத் நிஜாத் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

**சூடான்** - 2010 ஏப்ரலில் சூடானில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. 68% வாக்குகள் பெற்று அஹ்மத் அல்பசீர் வெற்றி பெற்றார்.



சர்வதேச நீதிமன்றம் இவருக்குப் பிடிவிறாந்து பிறப்பித்ததன் காரணமாக, இத்தேர்தலைப் புறக்கணிக்கும்படி மேலத்தேய நாடுகள் வேண்டுகோள்க்ளை விடுத்தன. ஆனால், சூடான் மக்கள் அதனை ஏற்கவில்லை.

**ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல்:**



2009.05.07 இல் நடைபெற்ற இத்தேர்தலில் 27 ஐரோப்பிய நாடுகளில் 768 மில்லியன் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதில் 43% பேர் வாக்களித்தனர். இதனால், 736 அங்கத்தவர்கள் தெரிவானார்கள். இத்தேர்தலில் பிரித்தானியாவின் ஆளும்கட்சி தோல்வி கண்டது. ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஆளும் கட்சி வெற்றி பெற்றது.

**இந்தியா அரசியலில் உயர் பதவி வகிக்கும் பெண்கள்:**

**ஜனாதிபதி** - இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதி பிரதீபா பட்டீல்.



**நாடாளுமன்றத்தின் முதல் பெண் சபாநாயகர்:**

**மீராகுமார்** - இவர் 15 ஆவது நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் தெரிவான தலித் இனப் பெண்மணியாவார்.

**பொலிவியா:**

ஸ்பானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றதன் 200 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் 2009.05.25 இல் கொண்டாடப்பட்டது.

**வட, தென் கொரியா நிகழ்வுகள்:**

வடகொரியா (2009.05.25) நிலத்திற்குக் கீழ் பாரிய அணு ஆயுதப் பரிசோதனையை நிகழ்த்தியது. இதனை ஐக்கிய அமெரிக்கா உட்பட பல நாடுகள் கண்டனம் செய்தன.



2010 இல் தென்கொரியாவின் கப்பலை வடகொரிய தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால், வடகொரியா இதனை மறுத்து வருகின்றது. 2010 ஜூலையில் ஜப்பான் கடலில் ஐ.அமெரிக்காவும் தென் கொரியாவும் யுத்த ஒத்திகை ஒன்றை நடத்தின; இதனை வடகொரியா கடுமையாகக் கண்டித்தது.

**சீனாவில் இனக்கலவரம்:**




2009 இல் வட மேற்கு சீனாவில் 'உரும்கி' பகுதியில் வாழும் 'உயிர்குர்' எனும் முஸ்லிம் இனத்தவருக்கும் அங்கு வாழும் 'ஹான்' இனத்தவர்களுக்கும் இடையில் இந்த இனக்கலவரம் மூண்டது. இக்கலகத்தை சீன இராணுவம் கடுமையான முறையில் அடக்கியது.

**மெக்சிகோ வளைகுடாவில் பெற்றோலிய எண்ணெய்க் கசிவு**



2010 ஏப்ரல் 20 திகதி அளவில் பிரித்தானிய எண்ணெய்க் கம்பெனிக்குச் சொந்தமான எண்ணெய் அகழ்வு நிலையத்தில் ஏற்பட்ட வெடிப்பால் ஜூலை வரை தொடராக ஆயிரக்கணக்கான பீப்பாய் எண்ணெய் கடலில் கலந்து சூழல் மாசடையக் காரணமானது. இதனால், லுசியானா, மிசிசிப்பி, அலபம ஆகிய மாநிலங்கள் பெரும் சூழல் பாதிப்புக்குள்ளாகின.

(மிகுதி அடுத்த வாரம்)

**கடந்த 04.08.2010 இன் விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. iv | 3. v | 5. iv |
| 2. i | 4. v | 6. iii |

# பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு





***பாகிஸ்தானில் கடும் மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் லட்சக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.***

***மேற்படி, வெள்ளப் பெருக்கினால் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மரணமடைந்துள்ளனர். மீட்புப் படையினரும் இராணுவத்தினரும் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.***

***பாகிஸ்தானின் நகரப் பகுதிகள் பலவும் இந்த மழை, வெள்ளப் பெருக்கின் காரணமாக செயலாற்றுப் போயுள்ளதுடன், தொடர்பாடல் வழிகளும் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக பாகிஸ்தான் முழுவதும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.***




**அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...**

# விண்வெளி ஆய்வுகூடத்தின் குளிரூட்டி செயலிழந்தது



சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தில் அமைக்கப்பட்டிருந்த குளிரூட்டி இயந்திரமொன்று எதிர்பாராத விதமாக செயலிழந்து போனமையால் அங்கு தங்கியிருந்த விண்வெளி ஆய்வாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகினர்.

அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்களே இவ்வாறு அசௌகரியங்களுக்கு ஆளாகினர்.

இரண்டு தொகுதிகளைக் கொண்டுள்ள குளிரூட்டிகளில் ஒரு தொகுதியே இவ்வாறு செயலிழந்தது. இருப்பினும், கடுமையான முயற்சிகளின் பின்னர் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பிரச்சினை சீர் செய்யப்பட்டமையால், தற்போது எந்தவொரு ஆபத்தும் இன்றி விண்வெளி வீரர்கள் தொடர்ந்து தமது [illegible] பணிகளை முன்னெடுக்க முடிந்துள்ளது.

**அற்லஸ் கேள்வி - 268**

**கேள்வி:** குளிரூட்டி செயலிழந்த சர்வதேச விண்வெளிஆய்வுகூடத்தில் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந்தனர்?

சரியான விடை................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 268, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 266 இன் சரியான விடை: கசன்ட்ரா**

**பரிசு பெறுவோர்**

வி.பி.கேஷாலினி,
650/2, திருகோணமலை வீதி,
மாத்தளை.

எம்.மு.ஆத்,
402A, வேம்படி வீதி, சம்மாந்துறை.

கேணுகா கருணாகரன்,
உபதபாற் கந்தோர் ஒழுங்கை,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் சாதனைகளில் சச்சின் டென்டுல்கர்




உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள வீரர் யார் தெரியுமா? இந்திய அணியின் சச்சின் டென்டுல்கர்தான் அது.

இலங்கையில் நடைபெற்று வருகின்ற போட்டிகளில் மூன்றாவது டெஸ்ட் போட்டியே டென்டுல்கரின் 169 ஆவது டெஸ்ட் போட்டியாக அமைந்தது.

இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் வோதான் 168 போட்டிகளுடன் இந்த சாதனைக்கு உரித்துடையவராக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 442 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள டென்டுல்கர் அதிக எண்ணிக்கையிலான ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டவர் என்ற சாதனையையும் நெருங்கி வருகின்றார். அதாவது, ஏற்கனவே இந்த சாதனையை தனதாக்கிக் கொண்டுள்ள இலங்கையின் சனத் ஜயசூரிய 444 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டு முதலாம் இடத்தில் உள்ள நிலையில் டென்டுல்கர் இன்னும் மூன்று ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்வாரேயாகில் அவரே உலகில் அதிக எண்ணிக்கையிலான ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டவர் என்ற சாதனைக்குரிய வராவார்.

## பந்துவீச்சுப் பட்டியல்



ஐ.சி.சி யின் பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தல் பட்டியலில் தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளரான டேல் ஸ்ட்ரைன் தொடர்ச்சியாக முதலாவது இடத்தைத் தக்க வைத்துள்ளார். இவர் பெற்றுள்ள புள்ளிகள் 887. பாகிஸ்தானின் மொஹமட் ஆஸிப் 818 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துடுப்பாட்டத்தில் சங்கா முதலாமிடம்




ஐ.சி.சி.யின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இதுநாள்வரை மேற்படி முதலிடம் இந்திய அணியின் ஷேவாக் வசமே இருந்தது. இருப்பினும், இலங்கையில் நடைபெற்று வருகின்ற டெஸ்ட் போட்டிகளில் சங்கக்கார சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியதன் பயனாகவே, முதலிடத்தை அவர் கைப்பற்ற முடிந்துள்ளது. இதனால், ஷேவாக் இரண்டாம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

## மீண்டும் யூசுப்..!



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்த பாகிஸ்தான் அணியின் மொஹமட் யூசுப் மீண்டும் பாகிஸ்தான் அணியின் சார்பாக போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிகளில் அவமானத்திற்குரிய முறையில் பாகிஸ்தான் அணி தோல்வியை சந்தித்ததன் காரணமாக நிலைகுலைந்து போயுள்ள பாகிஸ்தான் அணியை சீர்படுத்தி நிலைநிறுத்துவதற்காகவே மொஹமட் யூசுப் மீண்டும் அணியில் இணைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## முரளி, கும்ப்ளேயின் பயிற்சிக் கல்லூரி



இலங்கை டெஸ்ட் அணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள முத்தையா முரளிதரனும் இந்தியாவின் சுழல்பந்து வீச்சாளருமான அனில் கும்ப்ளேயும் இணைந்து பந்து வீச்சு பயிற்சிக் கல்லூரியொன்றை ஆரம்பிக்க இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் பெங்களூரிலேயே இந்தப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அணில் கும்ப்ளே பெங்களூரில் பந்து வீச்சு பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிப்பது குறித்து முரளிதரனுடன் ஏற்கனவே கலந்துரையாடி இருப்பதாகவும் முரளியின் டெஸ்ட் ஓய்வு வரை தாம் காத்திருந்ததாகவும் இனிமேல் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## பொதுநலவாய கிரிக்கெட்டுக்கு நிதி வழங்க மறுப்பு

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் டெல்லி நகரில் ஒக்டோபர் 3 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே. எனினும், இப்போட்டிகளை உரிய வகையில் நடத்துவதில் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, இப்போட்டிகளை நடத்துவதற்கு 100 கோடி ரூபா நிதி தேவை என்று இந்தியா கிரிக்கெட் சபையிடம் பொதுநலவாய போட்டி ஏற்பாட்டுக் குழு கேட்டிருந்தது. எனினும், இந்த அளவிலான தொகையை வழங்க முடியாது என்று கிரிக்கெட் சபை மறுத்துள்ளதாலேயே மேற்படி சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

மும்பையில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட் சபையின் குழுக்கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட்டதன் பின்னரே, இந்த நிராகரிப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருமான வரித் துறையினால் வரிச்சலுகைகள் வழங்கப்படாமையினாலேயே இத்தகைய தீர்மானத்தை எடுக்கவேண்டியேற்பட்டதாக கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## பயிற்றுனராக விரும்புகின்றார் இம்சமாம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குத் துடுப்பாட்டப் பயிற்சியாளராக பணியாற்ற விரும்புவதாக முன்னாள் வீரர் இம்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார்.

"பாகிஸ்தான் அணிக்கு தற்போதைய நிலையில் முழு நேரத்திற்கான பயிற்சியாளர் தேவைப்படுகின்றார். இதனையிட்டு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை என்னுடன் கலந்து பேசினால் நிச்சயமாக அதற்கு நான் சம்மதிப்பேன். எனது இந்த வளர்ச்சிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட்டே காரணம். எனவே, அதன் வளர்ச்சிக்கு என்னால் முடிந்ததை வழங்குவது எனது கடமையாகவே கருதுகிறேன்.

பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் சமயோசிதமாகத் துடுப்பெடுத்தாடுவதில்லை. பொறுமையைக் கடைப்பிடிப்பதுமில்லை. இவற்றிலிருந்து மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்" என்றும் இம்சமாம் உல்ஹக் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடநம்பிக்கையை ஒழிப்பதற்காக பிரகடனப்படுத்தப்பட்ட தினம்






## ஒகஸ்ட் 13 சர்வதேச இடது கைப்பழக்கமுடையோர் தினம்



நம்மில் சிலர் பிறவியிலேயே தமது வேலைகளைச் செய்வதற்கு பெரும்பாலும் இடது கையைப் பயன்படுத்துவதை நாம் கண்டிருக்கின்றோம். எனினும், சில பெற்றோர் தமது பிள்ளைகள் இடது கைப்பழக்கமுடையவர்களாய் இருப்பதை விரும்புவதில்லை. அத்துடன், இடது கைப் பழக்கமுடையவர்களாய் இருப்பது கூடாது என்ற மூட நம்பிக்கையும் சிலரிடையே பரவியிருக்கின்றது. இதனால், பிறவியிலேயே இடது கைப் பழக்கமுடையவர்களாய் இருக்கும் தமது பிள்ளைகளை சில பெற்றோர் வலுக்கட்டாயமாக வலது கைப்பழக்கமுடையவர்களாக மாற்ற முயற்சிக்கின்றனர். எனினும், மனோவியல் வைத்தியர்களோ இடது கைப்பழக்கமுள்ளவர்களின் அந்த பிறவிப் பழக்கத்தை வலுக்கட்டாயமாக மாற்றுவது கூடாது எனக் கூறுகின்றனர்.

### இடது கைப்பழக்கமுடையோர் தின பிரகடனம்

எவ்வாறாயினும், இடது கைப்பழக்கமுடையவர்கள் குறித்து சமூகத்தில் பரவிய மூடநம்பிக்கைகள், சமூகத்தில் இடது கைப் பழக்கமுடையவர்கள் புறக்கணிக்கப்படல் போன்றவற்றின் காரணமாக அவற்றை இல்லாதொழிக்கும்முகமாக ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதியை சர்வதேச இடது கைப்பழக்கமுடையவர்கள் தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது. தவிர, உலகின் பல நாடுகளிலுள்ள இடது கைக்காரர்களும் தமக்கென தனியான அமைப்புகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

### உலகப் புகழ் பெற்ற இடது கைப்பழக்கமுடையோர்

உலக சனத்தொகையில் சுமார் 8%-15% ஆனோர் இடது கைப்பழக்கமுடையவர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற ஓவியக் கலைஞர்களான லியனாடோ டாவின்சி, மைக்கல் எஞ்சலோ, புகழ் பெற்ற கணித மேதை எல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்றோரும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளான ஜெரல்ட் ஃபோர்ட், ஜோர்ஜ் எச்.டபிள்யூ.புஷ், பில் க்ளிண்டன் மற்றும் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா போன்றோரும் இடது கைப்பழக்கமுடையவர்களே. அத்துடன்; மா மன்னர் அலெக்ஸாண்டர், ஜூலியஸ் சீஸர், பேரரசன் நெப்போலியன் பொனபார்ட், விக்டோரியா மகாராணி, முன்னாள் கியூப ஜனாதிபதி ஃபிடெல் கெஸ்ட்ரோ போன்ற உலகின் பிரபலமான சில அரசியல் தலைவர்களும் இடது கைப்பழக்கமுடையவர்களே. தவிர; விளையாட்டு, எழுத்துத்துறை, நடிப்புத்துறை உட்பட பல்வேறு துறைகளிலும் இடது கைப்பழக்கமுடையவர்கள் சாதனை புரிந்துள்ளதோடு, சாதனை புரிந்தும் வருகின்றனர் என்பது இடது கைப்பழக்கமுடையவர்களை மேலும் உற்சாகப்படுத்துவதாக அமைகின்றது.

### இடது கைக்காரராக வருவதற்குரிய காரணம் என்ன?

பொதுவாக, எமது மூளை இடது, வலது என இரு பிரிவுகளாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரு பகுதிகளினதும் செயற்பாடுகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையே. மூளையின் வலது பகுதி எமது உடலின் இடது பக்கப் பிரிவையும், மூளையின் இடது பகுதி எமது உடலின் வலது பக்கப் பிரிவையும் கட்டுப்படுத்துவதோடு, செயற்படவும் செய்கின்றது. இவ்வாறே, மூளையின் நரம்புத் தொகுதியும் இரண்டாகப் பிரிந்துள்ளது. மூளையின் வலது பிரிவு அதிக செயற்பாடுடையவர்கள் இடது கைக்காரர்களாகவும் மூளையின் இடது பிரிவு அதிக செயற்பாடுடையவர்கள் வலது கைக்காரர்களாகவும் திகழ்கின்றனர்.

எனவே, இடது கைக்காரர்கள் குறைபாடுடையவர்கள் அல்லர். மாறாக, இடது கைப்பழக்கமுடையவர்கள் சிறந்த ஆளுமைத்திறனையும் அறிவுத்திறனையும் கொண்டிருப்பதாக சில ஆய்வுகள் தெரிவித்துள்ளன. இதுவரை உலகில் தோன்றிய புகழ் வாய்ந்தவர்கள் பலர் இடது கைப்பழக்கமுடையவர்களாகவே விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---



# ‘அரோரா’ என்றால் என்ன?



இயற்கை சில நேரங்களில் துருவப் பகுதிகளில் வண்ணக்கோலங்களை இடுவதுண்டு. பச்சை, சிவப்பு, மஞ்சள் என்று அதி அற்புதமான இந்த இயற்கை ஒளியை துருவஒளி அல்லது 'அரோரா' என்று அழைக்கிறார்கள். வட துருவத்தில் தெரியும் துருவஒளி ‘அரோரா போரியாலிஸ்’ எனப்படுகின்றது. இது செப்டெம்பர், ஒக்டோபர், மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிகமாக நிகழ்கின்றது.

சூரியனிலிருந்து வரும் வெப்பக்காற்றும் பூமியிலிருந்து வரும் காந்த அலைகளும் மோதும்போதே இந்த துருவ ஒளி உண்டாகின்றது. அரோரா, தூரங்களைப் பொறுத்து பலவித வண்ண ஒளிகளை வெளியிடுகிறது. நீலம், ஊதா நிறங்களிலும் அரோரா தோன்றுவதுண்டு. உயரத்தையும் எந்தெந்த வாயுக்கள் கலக்கின்றன என்பதையும் பொறுத்தே இந்த வண்ணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த அரோரா ஒளி மிகமிக அழகானது. இதைக் காண்பதற்காகவே வடதுருவத்தில் இருக்கும் அலஸ்கா போன்ற பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் படையெடுக்கின்றனர்.

---




# சூரியனைவிட பெரிய நட்சத்திரம் கண்டுபிடிப்பு



விண்வெளியில் சூரியனைவிட பெரியதாகவும் பிரகாசமாகவும் உள்ள நட்சத்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள ஷெஃபீல்ட் பல்கலைக்கழக வானியல் ஆராய்ச்சியாளர் போல் க்ரவுத்தர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆராய்ச்சியின்போதே இந்த புதிய-பெரிய நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

‘தரந்துலா நெபியுலா’ என்று அழைக்கப்படும் நட்சத்திரக்கூட்டங்களுக்கு மத்தியிலேயே இந்தப் புதிய நட்சத்திரம் இருந்துள்ளது. புழுதிப் புயல் போன்று புகை மண்டலமாக உள்ள மேகக்கூட்டங்களுக்கு இடையில் இந்த நட்சத்திரம் மிகப் பிரகாசமாக மின்னிக்கொண்டிருந்தது. R136al எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நட்சத்திரம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நட்சத்திரங்களிலேயே மிகவும் பெரியது என்றும் ஆனால், தற்போது உள்ள எடையைவிட, இரண்டு மடங்கு பெரியதாக இது இருந்திருக்கும் என்பதும் ஆராய்ச்சியாளர்களின் கணிப்பாகும்.

நாம் பூமியில் இருந்து பார்க்கும் சூரியனைவிட பன்மடங்கு அதிக பிரகாசமாகக் காணப்படும் இந்தப் புதிய நட்சத்திரமானது அதன் உயர் வெப்பம் காரணமாகத் தன்னைத்தானே எரித்துக்கொள்ளும் தன்மை உள்ளதால், தற்போதளவில் அதன் அளவு குறைந்துள்ளதாகவும் பூமியின் வெப்பத்தைப் போல் ஏழு மடங்கு அதிகமான வெப்பம் அதனைச் சுற்றி இருப்பதாகவும் அதிக உஷ்ணத்தால் தன்னைத்தானே எரித்துக்கொள்ளும் குணம் உள்ள இத்தகைய நட்சத்திரங்கள் காலப்போக்கில் சுருங்கி-சிறியதாகி முற்றிலும் அழிந்து விடும் என்றும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

இதன் ஆயுட்காலம் அதிக அளவாக (3 மில்லியன்) 30 லட்சம் ஆண்டுகள்தான். பொதுவாக, இத்தகைய நட்சத்திரங்கள் மிகக் குறைந்தளவு ஆயுட்காலத்தையே கொண்டுள்ளன. அத்துடன், இவை மிக அதிக தொலைவில் நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையில் மறைந்திருப்பதால் இவற்றைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.08.18 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 273**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## வழி காட்டுங்கள் — 1



## வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 2




## ரோமன் இலக்கத்தில் எழுதுக — 5

1) 18 - ..............................
2) 24 - ..............................
3) 98 - ..............................
4) 207 - ..............................

## இடைவெளியில் பொருத்தமான சொல்லை எழுதுக — 4

1. பனங்காட்டு .............. சலசலப்புக்கு அஞ்சாது.
(கிளி/நரி)
2. .................. பார்த்துப் ......................... சூடு போட்டுக்கொண்டது போல.
(கரடியைப்/புலியைப்/பூனை/பாம்பு)


## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக — 3



6 7 8 9

## அரிவுக்கு விருந்து 270 விடைகள்

**போட்டி: 2**




**போட்டி: 4**

1. உமிழ்நீர்ச் சுரப்பிகள்
2. பாதரசம்
3. புரதம்

**போட்டி: 5**

1. உடன்பாடு - எதிர்மறை
2. அணுகல் - விலகல்
3. ஒற்றை - இரட்டை
4. இலாபம் - நட்டம்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 270 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
சீனதுல் நஸீஃபா,
42/3, தெய்யனவெல, பதுளை.

**போட்டி: 02**
சாம் சேனுஜன்,
26, பாரதிபுரம், கன்னியா வீதி, திருகோணமலை.

**போட்டி: 03**
ரிஃப்கான் ஃபர்ஸி,
303/3, நாவின்ன, உலுவிடிகே.

**போட்டி: 04**
எஃப்.ஹஸ்னா,
67, முதலியார் வீதி, அக்கரைப்பற்று-03.

**போட்டி: 05**
டி.நிவேதனி,
57/5, தபால்கந்த, பூனாகலை வீதி, பண்டாரவளை.

**பாராட்டுப் பெறுவோர்**

* இரா.கோபி, பளை.
* எஃப்.நுஸ்ரா மத்லூஃப், ஹெம்மாதகம.
* எஃப்.ஜெமீலா, மாவனல்லை.
* ஆர்.பிரதீப்ராஜ், சிலாபம்.
* ஆர்.துஷாந்தி, பொகவந்தலாவ.
* எஃப்.இஸ்மா, வீரகெட்டிய.
* ம.றிஜிகரன், சாவகச்சேரி.
* எம்.ரஜீவன், வெலிப்பன்னை.
* எம்.ஸஹ்ரான், ஹாலி-எல.
* எம்.நதீர்கான், புத்தளம்.

## விஜய் வாசகர் மடல்




**வா**ராவாரம் 'விஜய்'யில் வரும் அத்தனை தகவல்களும் வரவேற்கத் தக்கன. மாணவரின் திறமைகளை வெளிக்கொணர நடாத்தப்படும் போட்டிகள் மேலும் பயனுடையவையே.

**-ம.றஜிகரன், யா/சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வித்., மட்டுவில்.**

**'த**கவல் தொடர்பாடல்', 'அபூர்வ மூலிகை', 'பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்தல்' என்பன பாராட்டுக்குரியவை. இன்றைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு 'விஜய்' மேலும் வழிவகுக்கும் என்பது தெளிவு. **நஜீமா ஹில்மி, சம்மாந்துறை-10.**

**'வி**ஜய்'யில் வெளிவருகின்ற அனைத்துத் தகவல்களும் எமக்குப் பயனுள்ளதாகவே இருக்கின்றன. குறிப்பாக, 'சாம்பல் திமிங்கிலம்', 'மானிட தொடர்பாடல்' போன்ற தகவல்கள் மிகவும் பயனுடையதாகவே காணப்பட்டன.

**-நஜ்ரா மொஹமட், தரம்-12, ஹிரிம்புறி சுலைமானியா ம.வித்., காலி.**

**வா**சிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். ஆனால், தற்போது மாணவர்களிடையே வாசித்தல் என்பது அருகி வருகின்றது. ஆயினும், நீ அதனை உடைக்க பல பிரயோசனமான, சுவாரஸ்யமான புதிய தகவல்களுடன் வாராவாரம் வெளிவருகின்றாய். உனக்கு என் பலகோடி நன்றிகள்.

**-ஆன் ஷாலினி, மாதகல், யாழ்ப்பாணம்.**




**'மா**னிட தொடர்பாடல் வரலாறு' ஆக்கத்தினூடாக அதிகமான பயன்களைப் பெற்றேன். இந்த ஆக்கமானது பரீட்சைக்கு மிக உதவியாக அமைந்தது.

**-எம்.ரில்வான், தரம்-10B, முஸ்லிம் ம.கல்., குருத்தலாவ.**

**'பா**டசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்தல்' எனும் ஆக்கம் மிகவும் பயனுடையதாக இருந்தது. இதன்மூலம் எம் போன்ற பாடசாலை மாணவர்களின் உரிமைகள் என்னவென்று தெரிந்துகொண்டேன். அவ்வாறே, விண்வெளித் தகவல்கள், சிறுகதைகள் என்பன என்னைக் கவர்ந்தவை. மேலும், பல புதிய விடயங்களையும் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். விஜய்க்கு எனது வாழ்த்துக்கள்.

**-எப்.ஹஸ்னியா, தெலம்புகல்ல, தொடம்கஸ்லந்த.**

**உ**ன்னில் வெளிவரும் அனைத்து விடயங்களும் தரமானவை. அதிலும் விளையாட்டுத் தகவல்கள், சிறுகதை, விண்வெளித் தகவல்கள் என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. உன் பயணம் தொடர மென்மேலும் வாழ்த்துகின்றேன்.

**-இ.நிஷாந்த், தரம்-9A, கிளிநொச்சி ம.வித்., கிளிநொச்சி.**

**மா**னிட தொடர்பாடல் வரலாற்றினை வாசித்ததனூடாக, ஆதிகால மனிதனின் வாழ்க்கை முறை எவ்வாறிருந்தது என்பதை நான் நன்கு அறிந்துகொண்டேன். அத்துடன், சூரியனில் நிலநடுக்கம் ஏற்படுமா? என்ற தலைப்பைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்தேன். முழுமையாக வாசித்த பின்னரே ஆறுதலடைந்தேன்.

**-எம்.ஹிஜா, தி/அல்-ஹம்றா ம.வித்., தோப்பூர்.**

**சூ**ரியனைக் கண்டால் மலரும் தாமரை போல்; புதன் வந்தால் ஆர்வத்தோடு காத்திருக்கிறேன் உன் வருகைக்காக! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் எனக்கு மிகவும் பிடித்தவையே!


**-ஐ.ஃபாஹிமா, தரம்-10G2, பொ.மு.ம.கல், பொலன்னறுவை.**

**இந்த இதழில் (11.08.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.08.2010.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையோரின் வேண்டுகோளை மறுக்கமுடியாத நிலை






அரியாலையூர் சி.சிவதாசன்

சபையில் இருந்த பெரியோர்கள் சங்கிலியனை அழைத்து ''நீதான் இந்த யாழ்ப்பாண நாட்டின் மன்னனாக வேண்டும். பகைவர்களை எதிர்த்து நாட்டை வழி நடத்தும் வல்லமை உன்னிடமே உள்ளது. முக்காலமும் உணர்ந்த மாமுனிவர் எதிர்காலத்தை உணர்ந்தே உன்னை அரசனாக்கவேண்டும் எனக் கூறியுள்ளார். ஆதலால் நீ அரசுரிமையை மறுக்காமல் அன்போடு ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என வேண்டினார்கள்.

சபையில் இருந்த அனைவரும் சங்கிலி அரசனாவதையே விரும்பினர். இருந்தபோதும் சங்கிலி சபையில் கூறிய கருத்துக்களை புறம்தள்ளவும் விரும்பவில்லை. அத்துடன், மன்னன் பரராசசேகரன் சங்கிலியின் வீரத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்திருந்தான். மாமுனிவரின் ஆலோசனையைப் பெற்றபின்பு அவனையே அரசனாக்க வேண்டுமென்ற முடிவுக்கும் வந்திருந்தான். சபையோரின் முடிவு சாதகமாக இருப்பதைக் கண்டு தன் முடிவை மன்னன் பரராசசேகரன் கூற ஆயத்தமானபோது ''மன்னா!'' என்றொரு குரல் சபையிலிருந்து கேட்டது.

நல்லூரில் அமைக்கப்பட்டிருக்கும் சங்கிலி மன்னனின் உருவச்சிலை



அந்தக் குரலுக்குரியவன் வேறு யாருமல்ல. அவன் பரநிருபசிங்கனின் தாய்மாமன்.

மன்னன் பரராசசேகரனின் அமைச்சரவையில் ஒரு முக்கிய அமைச்சன். அவனுக்கு அப்பாபிள்ளை என்ற இன்னொரு பெயருமுண்டு. தன்னலமே உயர்வாகக் கொண்டவன். மற்றவர் நன்மை பெறுவது கண்டு பொறுத்திடாத குள்ளநரி, சூழ்ச்சி செய்வதில் அவனுக்கு நிகரானவன் எவருமில்லை. அப்படியானவன் சபையில் மன்னனை விழித்து நகைப்புடன், ''தப்பில்லாத, நேர்மையான, நல்லாட்சி செய்யும் மன்னா! மரபு நீதிக்கு மாறாக எவ்வாறு தங்கள் மனம் மாறியதோ அறிகிலேன். தங்கள் செயல் கண்டு உலகோர் பழிப்பார்களே! தங்கள் அவையில் தவறு கண்டு அறிவுரை பகரும் அமைச்சர்களில் நானும் ஒருவன்.எனவே, வழிவழி வரும் அரசு முறையை மாற்ற நினைப்பது தவறு. யாரோ ஒரு முனிவன் சொன்னதைக் கேட்டு முறை தவறுதல் நியாயமா?'' என வினவினான்.

மன்னன் பரராசசேகரன் அமைச்சனான அப்பா முதலியை நன்கு அறிவான். தன் மைத்துனனான அவன் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நச்சுத்தன்மையானவை என்பதால் அவன் வார்த்தைகளுக்கு மன்னன் மதிப்புக் கொடுத்துப் பதில் அளிக்கவில்லை. சபையோரும் அவன் வார்த்தைகளை கேட்டு அலட்டிக்கொள்ளவில்லை.

அவன் மரபு முறை பற்றிப் பேசியதில் ஒரு வஞ்சக சூழ்ச்சியும் நிறைந்திருந்தது. அந்த அப்பாமுதலிக்கு அழகே உருவான மகள் ஒருத்தி இருந்தாள். தன் தங்கை மகன் பரநிருபசிங்கன் அரசனானால் தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைக்கலாம், அதன்மூலம் யாழ்ப்பாண அரசில் தான் முதன்மை நிலையை பெற்றுவிடலாம் என்ற எண்ணமும் அவனின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதனைச் சபையோர் அறியாவிட்டாலும் மன்னன் பரராசசேகரன் நன்கு அறிவான். சபையோர்கள் ''மாமுனிவரின் சொற்படி நடப்பதே நாட்டுக்கு நல்லது. மறுபேச்சுக்கு இங்கு இடமில்லை. வீரனும் அஞ்சாநெஞ்சனுமான சங்கிலியே யாழ்ப்பாண மண்ணின் அரசனாக முடிசூட வேண்டும்'' என ஏகமனதாகக் கூறினார்கள்.

சபையில் இருந்த பெரியோர்கள் சங்கிலியனை அழைத்து ''நீதான் இந்த யாழ்ப்பாண நாட்டின் மன்னனாக வேண்டும். பகைவர்களை எதிர்த்து நாட்டை வழி நடத்தும் வல்லமை உன்னிடமே உள்ளது. முக்காலமும் உணர்ந்த மாமுனிவர் எதிர்காலத்தை உணர்ந்தே உன்னை அரசனாக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். ஆதலால் நீ அரசுரிமையை மறுக்காமல் பொறுப்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என வேண்டினார்கள்.

அவர்களின் வேண்டுதலை சங்கிலி ஏற்றுக் கொண்டான். அதைப் பார்த்த அமைச்சன் அப்பாமுதலியின் முகம் மாறியது. நெஞ்சில் வேதனை குடிகொண்டது. அவனால் தனித்து அங்கு எதுவும் செய்துவிட முடியவில்லை. (தொடரும்....)

## பேனாவின் ஆரம்பகாலம்

புராதன காலத்தில் மக்கள் தாவரக் குழாய்களில் சாயத்தை நிரப்பி எழுதினார்கள். கி.மு 500 ஆம் ஆண்டளவில் பறவைகளின் இறகு முனையை கூராகச் சீவி சாயத்தில் நனைத்து அதன்மூலம் எழுதினார்கள். இலத்தீன் மொழியில் 'பென்னா' என்றால் 'பறவையின் இறகு' என்பதாகும். இதுவே ஆங்கிலத்தில் 'பென்'னாகவும் தமிழில் பேனாவாகவும் மாறியது.

இறகைப் பேனாவாக உபயோகிக்கும் காலத்தில் இறகுகளைக் கூர்மையாகச் சீவிக் கொள்வதற்கென சிறிய கத்தியொன்றை வைத்திருந்தனர். அந்தக் கத்தியை 'பென் நைஃப்' (Pen Knife) என்றனர். அதுவே 'பேனாக் கத்தி' என்று தமிழில் பெயர் பெற்றது.

பறவைகளின் இறகை ஆங்கிலத்தில் (Quill) குவில் என்றும் சொல்வதுண்டு. அந்த இறகுகளை எழுதுவினைஞர்கள் பயன்படுத்தியதால் அவர்களுக்கு குவில் ட்ரைவர் (Quill driver) என்று பெயர் வந்தது.



# பென்சிலால் எழுதியதை ரப்பர் அழிப்பது எப்படி?



பென்சிலால் எழுதுவதால் ஒரு வசதியுண்டு. அதாவது, தவறாக எழுதிவிட்டால் அதனை ரப்பரால் அழித்துவிடலாம். பென்சிலால் எழுதியதை ரப்பர் எப்படி அழிக்கிறது? இதோ! இப்படித்தான்.

பொதுவாகப் பென்சில்களில் கிராபைட் (Graphite) எனும் மென்மையாக்கப்பட்ட கரித்துண்டுதான் அதிகம் இருக்கிறது. அதில் 'லெட்' எனும் காரீயத்தின் அளவு மிகவும் குறைவு. கல்லில் எழுத்துக்களைச் செதுக்கும்போது கல்லுக்குள் உளி ஊடுருவிச் செல்கிறது. அதனால், எழுத்துக்கள் கல்லில் பதிகின்றன.

ஆனால், பென்சிலால் பேப்பரில் எழுதும்போது, அதன் கருந்துகள்கள் காகிதத்தின் தளத்தை ஊடுருவி உள்ளே செல்வதில்லை. காகிதமானது தாவர நார்ப்பொருள்களால் உருவாக்கப்பட்டதன் காரணமாக, அந்த நார்ப்பொருளின் மீதே பென்சில் துகள்கள் ஒட்டிக்கொள்கின்றன. ரப்பரால் அவற்றை அழிக்கும்போது நுட்பமான அந்தக் 'கிராபைட்' துகள்கள் காகிதத்திலிருந்து பிரிக்கப்பட்டு, மென்மையான ரப்பரின் மீது ஒட்டிக்கொள்கின்றன. இதனால், அழித்த பின்னர் ரப்பரின் மேற்புறத்தில் கருந்திட்டுப் போன்று 'கிராபைட்' ஒட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களுக்குப் புலப்படாத 'மவுஸ்' கண்டுபிடிப்பு!

கணினிப் பாவனையாளர்களுக்கு கண்ணுக்குப் புலப்படாத புதுவகை 'மவுஸ் (Mouse) ஒன்று அறிமுகமாகின்றது. இது உங்களுக்கு ஆச்சரியமாக உள்ளதல்லவா? ஆம்.... உண்மையும் அதுதான்.

அமெரிக்காவின் 'மெஸாச்சுசெட்ஸ்' தொழில்நுட்ப நிறுவனமே இந்த மவுஸை 'மவுஸ்லஸ்' (Mouseless) எனும் பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. குறித்த நவீன கண்களுக்குத் தெரியாத மவுஸைப் பயன்படுத்த வேண்டுமாயின், அதற்குரிய கணினியில் விசேட கருவியொன்றைப் பொருத்தவேண்டும். இந்த நவீன

## வெறுமையான கையை அங்குமிங்கும் நகர்த்தினாலே போதும்...

கருவியில் பல்வேறு வகையிலான கதிர்வீச்சுக்கள் உள்ளன. இந்தக் கதிர்வீச்சுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை அவதானிப்பதற்கென்று 'கெமரா' ஒன்று காணப்படும்.

இவ்வாறு கண்ணுக்குத் தெரியாத மவுஸை இயக்குவதற்கு முதலில் கணினியை இயக்குபவர் வழக்கமாக மவுஸ் இருக்க வேண்டிய இடத்தில் கையை வைத்தல் வேண்டும். அதே சமகாலத்தில் குறித்த இடத்தில் கதிர்வீச்சுக்கள் அவ்விடத்தில் குவிந்து காணப்படும்.




வழக்கமாக மவுஸைப் பாவிக்கும்போது எவ்வாறு ஆள்காட்டி விரலைக் கொண்டு 'க்ளிக்' செய்வோமோ அதேபோன்று வெறுமையான கையைக்கொண்டு க்ளிக் செய்தால் போதும்.







அப்போது அங்கு குவிக்கப்பட்டிருக்கின்ற கதிர்கள் விரல் அசைவிற்கேற்ப செயற்படத் தொடங்கும் அதே சந்தர்ப்பத்தில் அதற்குள் கதிர் வீச்சுக்களின் மாற்றத்தை அவதானித்துக் கொண்டிருக்கின்ற 'கெமரா' உடனே அதனைக் கணினிக்கு உணர்த்தும். அதற்கமைய, கணினி செயற்படத் தொடங்கும்.

அதாகப்பட்டது, கணினியைப் பாவிப்பவர், 'மவுஸ்' இருக்கவேண்டிய இடத்தில் 'மவுஸ்' இருப்பதாக கற்பனை செய்துகொள்ள வேண்டியதுதான். அவ்வாறே எந்தவகையில் மவுஸை நாம் இயக்குகின்றோமோ, அவ்வாறே விரல்களால் 'டபள் க்ளிக்', 'ரைட் க்ளிக்' என அழுத்த வேண்டியதுதான். இயல்பாகவே கணினிக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக் கணினி தன் தொழிற்பாட்டை மேற்கொள்ளும்.

'லெப்டொப்' தொடுகை திரை (Touch Screen) கணினியிலுள்ள தொழிற்பாட்டிற்கு இது சமமாகுமா? என்று சிலர் வினவக்கூடும்.



அப்படியல்ல தொடுகைத் திரையிலுள்ள 'வப்பஸர்' சிறியதாகும். அது உள்ள இடத்தில் வைத்தே இயக்க வேண்டியிருக்கும். விரும்பிய திசையில் அதனை நகர்த்த முடியாது. ஆனால், புதிய கண்டுபிடிப்பான 'மவுஸ்லஸ்' அப்படியல்ல, அதிலுள்ள, வப்பஸரை நமக்குத் தேவையான விதத்தில் கெமராவில் பதியும் கதிர்வீச்சுக்களின் மூலம் நகர்த்தித் தொழிற்படுத்த முடியும்.

இதற்கான மென்பொருளை வடிவமைப்பதில் மூன்று முக்கிய நபர்களின் பங்களிப்பு இடம்பெற்றுள்ளது.



'மெஸாச்சுசெட்ஸ்' நிறுவனத்தின் பிரனாவ் மிஸ்டரி, லியாங் சேங்க், பெட்டி மயெஸ் ஆகியோரே அந்த மூன்று பேர்களாவர்.

இந்தப் புதிய வகை 'மவுஸ்லஸ்' தொகுதியை விலைக்கு வாங்குவதென்றால் 20 டொலர் வரையில் செலவாகும். இலங்கை நாணயப்படி ரூ.2,000 அளவில் தேவைப்படும். என்றாலும் நாளடைவில் இந்த விலை குறையலாம். அதாவது, 5 டொலர் அளவிற்கு (ரூபா 500) இது குறையக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 11, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org